AS WE SOW-SO WE REAP

A NEW DRAMA IN TAMIL

BY

RAO BAHADUR, P. SAMBANDAM, B.A., B.L.

Author of:

" The Two Sisters," " Galava," "Manohara," "The Curse of Urvasi," "The Merchant of Vanipura," " Fate and Love," "Simhalanatha " "Pushpavalli," " Amaladitya, " " Magapathi," " Farces," " Siruthondar," " The Golden Fetters, " " True Love," " The Bandit Chief," " Bricks-between," "At any Cost," " The Fair Ghost," " The Wedding of Valli," " The Eye of Love," "Vijayarangam," " As you like it," " Ratnavali," " Lord Buddha," " The Tragedy of Silence," " The Good Fairy," " Geetha Manjari," "The True Brother," " Malavikagnimitra," " Chandrahari," " The Demon Land," " Sabapathy " Part I, "The Pongal Feast " or " Sabapathy " Part II, " A Rehearsal " or " Sabapathy " Part III, " Sabapathy " Part IV, " Blessed in a Wife," " The Dancing Girl," "Subbadra—Arjuna," " Karna the Giver," " Sahadeva's Stratagem," " The Surgeon General's Prescription," " Vichu's Wife," " Sakuntala," " Vikramorvasi," " The Point of View," " The Two Selves," " The Tragic Denouement," " The Sub-Asst. Magistrate of Sultanpet," " Harischandra," "Blind Ambition," " Markandeya," " Sarangadhara," "The Two Friends," "The Treachery of Kalappa " etc., in Tamil, and " Harischandra," and " Yayathi " in English.

SECOND EDITION.

Madras:

PRINTED BY KESARI PRINTING WORKS,

150, ANNA PILLAI STREET, G. T.

1932

Price per Copy [redacted] 2.00 [All Rights Reserved.

முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்

இந்த நவீன நாடகம்

ராவ்பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ்நூல்கள் :— லீலாவதி - சுலோசனை, சாரங்கதரன், மகபதி, மனோஹரன், நற்குலதெய்வம், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், காதலர் கண்கள், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், ரத்னவளி, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, பிரஹசனங்கள், அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், வள்ளி மணம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்கிரமோர்வசி முதலியன.

இரண்டாம் பதிப்பு.

சென்னை 'கேஸரி' அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

1932

[விலை 2.00

காபிரைட்.]

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

PREFACE

Some years ago, the Suguna Vilasa Sabha was asked at a short notice to give a performance in aid of the Indian Famine Fund. I wrote this drama, rehearsed it, and staged it, within ten days almost. Some time back I revised and printed it; this is the Second Edition of that work. In this work of mine, I have raised two or three psychological problems; how far this drama is a correct solution of these, I must leave it to the reader.

All dramatic societies—professional and amateur—are hereby informed that they must take my previous permission and pay a small royalty before staging this or any other drama by me; otherwise they will make themselves liable to be prosecuted for breach of Copyright before a Magistrate's Court.

Copies of my works can be had at No. 70, Acharappan Street, G. T. Madras, and at all respectable Book-sellers.

PAMMAL LODGE,
MADRAS,
12th January 1932.

THE AUTHOR.

முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்

நாடக பாத்திரங்கள்.

மதனமோஹனன்	இந்தூர் நாட்டு அரசிளங்குமரன்.
விஜயேந்திரன்	மதன மோஹனனுடைய அம்மான்.
தர்மபாலன்	மதனமோஹனன் நண்பன். மந்திரி.
திண்ணன்	பித்தம் பிடித்த ஓர் பௌராணிகன்.
தண்டாயுதன்	அரண்மனை வேலையாள்.
ஜெயந்தன்	மதனமோஹனனுக்கும் கிரிஜாவுக்கும் பிறந்த மைந்தன்.
வனஜா	விஜயேந்திரன் புதல்வி.
கிரிஜா	வனஜாவின் சிறிய தாயாருடைய பெண்.

தெருக்கூத்தாடிகள் முதலியோர்.

கதை நிகழிடம்:—இந்தூர் நாட்டிலும், அருகிலுள்ள பிரதேசத்திலும்.

வ. அம்மா! அவ்வளவு கோபமா? ஒன்றுமில்லை, நீ யாருக்காக சிங்காரித்துக்கொண் டிருக்கிறாயோ, அவர் எப்பொழுது வருகிறாரென்று கேட்டேன், உனக்குத் தெரியுமே என்று.

கி. ஆமாம் ஆமாம், இந்த சூதெல்லாம் எனக்குத் தெரியும் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னுமென்று, நீ சிங்காரித்துக்கொண் டிருப்பதை என்மீது சாற்றுகிறாயோ? எப்பொழுது வருகிறார் உன் காதலர்? நீ சொல்.

வ. யார் காதலர்? யார் காதலர்? இப்படி என்னைப் பார்த்துச்சொல்லடி! அப்படியா சமாசாரம்! எனக்குத் தானோ அன்றைத்தினம் ரோஜாப் புஷ்பம் தலையிற் சூட்டினார்? உம் உம்.

கி. ஆமாம், நான்தான் அவருக்குத் திலகப்பொட்டிட்டேனோ அன்றைத்தினம்? தெரியாதோ எனக்கு சமாசாரம்?

வ. நீ என்ன அதிகமாகப் பேசுகிறாய்! சமாசாரத்தை வெளியில் இழுத்துவிட வேண்டுமோ? அவர் உனக்கு முத்தம் கொடுத்தாரோ இல்லையோ அன்றைக்கு? பொய் பேசாதே.

கி. நீ பொய் பேசாதே! நீ அவருக்குப் போகும்பொழுது முத்தம் கொடுத்தாயா இல்லையா?

வ. சரிதான் அப்படித்தா னிருக்கட்டுமே. எப்படியும் அவர்தானே உனக்குக் கொடுத்தார்—கிரிஜா, நாமிருவரும் இதுவரையில் அக்காள் தங்கையைப்போல் வளர்ந்து வந்தோமே, இப்பொழுது என்னிடம் ஏதாவது நீ ஒளிக்கலாமா? உண்மையைக் கூறிவிடு, நான் ஏதாவது உன்னிடம் ரகசியம் ஒளிக்கிறேனா? ராஜகுமாரர் உன்னையே மணம் புரிவதாக வாக்களித்திருக்கிறாராமே, உண்மைதானா?

கி. யார் சொன்னது? யார் சொன்னது? யார் சொன்னது?

வ. அம்மா! அவ்வளவு கோபமா? உள்ளத்தைச் சொன்னால் அதற்குக் கோபமேன்? யதார்த்தவாதி பகு ஜன விரோதி—

தின்னவன், வருகிற வழியில் வைத்திருந்த
ஒரு தண்ணீர்க் குடத்தைக் கவிழ்த்துக்கொண்டு
வருகிறான்.

கி. இது யார் அது? இந்த பயித்தியம் எங்கே வந்தது?

தி. அம்மணி, மன்னிக்கவேண்டும். நான் கந்த புராணம் படித்துக்கொண் டிருக்கும்போது ஒரு சந்தேகம் வந்தது; அதைத் தெளிவித்துக்கொண்டு போக வந்தேன். இராவணன் துரோபதியைத் தூக்கிக்கொண்டு போகும் பொழுது, எதிர்த்து சண்டை செய்தது கீசகனா, அல்லது சுப்பிரமணியரா?

கி. அக்காள்! அக்காள்! இந்த இழவைப் பார், என் நீர்க் குடத்தைக் கவிழ்த்துவிட்டது!

வ. ஏ! பயித்தியம்! இங்கென்ன வேலை போம்!

தி. அல்லே அம்மா—அந்த சந்தேகம்—

வ. சந்தேகமா? கீசகனுமல்ல, சுப்பிரமணியருமல்ல, ரம்பை போம்!

தி. வந்தனம் தந்தனம். [போகிறான்.]

கி. அக்காள் என் தண்ணீரெல்லாம் போயிற்றே. உன் குடத்திலிருக்கிற ஜலத்தில் கொஞ்சம் கொடு, இப் புஷ்பச் செடிக்கு விடவேண்டும்.

வ. ஐயோ பாபம்! என்னடி யம்மா! நீ வேண்டுமென்றால் போய் மறுபடியும் கொண்டுவா; என் ஜலத்தைக் கொடுத்துவிட்டு நான் என்ன செய்வது?

கி. பாதிதானே கேட்டேன்?

வ. ஐயோ பாபம்! அதெல்லாம் உதவாது போ.

கி. இதுதானே! நீ என் அக்காளல்ல. நாம் எல்லாவற்றை யும் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டியவர்க ளல்ல? கொடு பாதி.

வ. உம் உம்! உன் காதலரில் பாதி எனக்குக் கொடுத்து விடுகிறாயா?

கி. ஏனோ?

வ. ஏ! அதற்கு மாத்திரம் ஏனோ!—அம்மா! இதற்குள்ளாக எவ்வளவு பொறுமையடி யம்மா!

மறுபடியும் தின்னன் வருகிறான்.

தி. அம்மணி, இன்னொரு சந்தேகம், மன்னிக்க வேண்டும்.

வ. இதென்ன பெரிய கஷ்டமாய் வந்துசேர்ந்தது!

தி. கிருஷ்ணன் யமலோகம்போய் மல்லிகைப்பூ கொண்டுவந்த போது, தாடகைக்குக் கொடுத்தாரோ அல்லது பத்மாசுரனுக்குக் கொடுத்தாரோ? சந்தேகம்.

வ. உங்கள் பாட்டனுருக்குக் கொடுத்தார் போமையா!

தி. சந்தோஷம். [போகிறான்.]

கி. பாரிஜாத மல்லவோ கொண்டுவரத் தெய்வலோகம் சென்றார். இந்த பயித்தியத்தைப் பார்!—பாரிஜாதம் நல்ல புஷ்பம்—அதிருக்கட்டும், அக்காள், உனக்குப் புஷ்பங்களிலெல்லாம் எது இஷ்டம்?

வ. உனக் கெது இஷ்டம்?

கி. எனக்கு எல்லாவற்றைப் பார்க்கிலும் ரோஜாதான் இஷ்டம்; அதைவிட அழகிய புஷ்பம் ஒன்று உண்டோ உலகில்?

வ. சீ! மல்லிகையே சிறந்த புஷ்பம். அதன் வாசனை எங்கே, ரோஜாவின் வாசனை யெங்கே?

கி. நிரம்ப புத்திசாலி!

வ. நீ நிரம்ப புத்திசாலி!

கி. நீ கெட்டிக்காரி தான்.

வ. நீ கெட்டிக்காரிதான்!

இருவர்களுக்கும் இடையில் மதனமோஹனன் வருகிறான்.

ம. என்ன? என்ன சண்டை?

வ. ஒன்றுமில்லை.

கி. எப்பொழுது வந்தீர்?

ம. சற்று முன்பாகத்தான் வந்தேன். என்ன சண்டை?

கி. சண்டை யொன்றுமில்லை.

ம. பிறகு என்ன, சச்சரவோ ?

கி. ஒன்றுமில்லை. புஷ்பங்களிலெல்லாம் உயர்ந்த தெது வென்று நான் கேட்டேன். அதன்மீது வனஜா மல்லிகைதான் சிறந்ததெனக் கூறினாள், நான் ரோஜாதான் சிறந்ததெனக் கூறினேன், அவ்வளவுதான்.

வ. ஆம். நீர் நியாயம் சொல்லும். பட்சபாத மில்லாமற் சொல்லும். மல்லிகையா ரோஜாவா ?

ம. இதென்ன பெரிய சங்கடமா யிருக்கிறது ! நான் என்ன சொல்வது ? யார் பட்சம் சொல்வது ?

கி. ஆம். என் பட்சம் பேசுவீரா ? எனக்குத் தெரியாதோ ?

வ. சரி, யார்மீது பட்சமிருக்கிறதோ உமக்கு, அவள் பட்சம்தானே கூறுவீர் !

ம. இதென்ன தொந்தரவு ! [ஒரு புறமாக கிரிஜாவிடம்] கிரிஜா ! இதென்ன கஷ்டம், உன் பக்கம் பேசினால் அவளுக்குக் கோபம் வருமே.

கி. உம் உம் ! அதைத்தான் முக்கியமாகப் பார்ப்பீர் ! கேட்பானேன் !

ம. [ஒரு புறமாக வனஜாவிடம்] வனஜா ! நான் சொல்வதைக் கேள் ; உன் பட்சம் பேசினால் கிரிஜாவுக்குக் கோபம் வராதா ?

வ. ஆமாமாம், என்பக்கம் பேசுவீரா நீர் ?

ம. இதென்ன கஷ்டமாய் முடிந்ததே ! இதென்ன தர்ம சங்கடம் ! —

திண்ணன் மறுபடியும் வருகிறான்.

தி. அரசே, நமஸ்காரம். தங்களைத்தான் நெடுநாழிகையாகத் தேடிக்கொண்டிருந்தேன். பாகவதத்தில் ஒரு சந்தேகம் வந்தது. பஞ்சபாண்டவர் மூன்று பெயரும் ருக்மணி கலியாணத்திலே ராமரோடு சண்டை போட்டபொழுது லட்சுமணனைக் கொன்றது யார் ?

ம. உங்கள் தமயனுரையா ! போம்.

தி. சே ! எங்கள் பாட்டனார் ஆனால் நிரம்ப வேலை செய்திருக்கிறார் முன்பு !—

ம. ஆமாம், போமையா. [தின்னன் போகிருன்.]
இதென்ன ஒரு அற்ப விஷயத்திற்காக இரண்டு பெயரும் கோபித்துக்கொண்டு முகத்தை ஒருவாராய் வைத்துக்கொண் டிருக்கிறீர்களே—பெண்ணே வனஜா, நான் சொல்வதைக் கேள்.

வ. பெண்ணே வனஜா—கண்ணே கிரிஜா!

ம. வனஜா, அப்படி யொன்று மெண்ணுதே, உங்களிருவரையும் என் னிரு கண்ணெனவே பாவித்து வருகிறேன்.

வ. ஆமாம், ஆனல் ஒரு கண்ணில் பார்வை மட்டு.

ம. சீச்சீ! அப்படி யொன்றுமில்லை—அதிருக்கட்டும்—எதோ பார்க்கலாம்! நான் என் தகப்பனர் சமாதிக்குப் புஷ்பமெடுத்துச் செல்லவேண்டும் விரைவில். யார் முன்பு எனக்கு ஒரு மல்லிகை மாலை தொடுத்துக் கொடுக்கிறீர்களோ பார்ப்போம்.—என்ன இருவரும் சும்மா இருக்கிறீர்கள்?—கிரிஜா!

கி. வனஜாவைக் கேளுங்கள்—நான் கொடுத்தால் உமக் கிஷ்டமா யிருக்குமோ என்னவோ?

ம. இல்லை இல்லை! நீதான் கொடு.

கி. என் பட்சம் பேசினல் கொடுக்கிறேன்.

ம. வனஜா, நீயாவது கொடு.

வ. நானுவதுதானே கொடுக்க! கிரிஜாவை முன்பு கேட்டீரே, அவளையே தரச்சொல்லுங்கள்.

ம. அப்படியல்ல நீதான் கொடு.

வ. உம்—என் பட்சம் பேசினுல் தொடுக்கிறேன்.

ம. இதென்ன பெரிய கஷ்டமாய் நேர்ந்தது!—இது தான் யுக்தி—யார் எனக்கு மாலை விரைவில் கட்டிக்கொடுக்கிருளோ, அவளுக்கொரு முத்தம் கொடுக்கப் போகிறேன்.

[இருவரும் ஓடிப்போய் விரைவாகப் புஷ்பம் பறிக்கிருர்கள்.]

ஆ! அப்படி!

திண்ணன் மறுபடியும் வருகிருன்.

தி. அரசே, ஒரு மனு, மன்னிக்கவேண்டும்.

ம. என்ன ?

தி. பாரதர் இராமாயணம் எழுதினரா? ராமாயணர் பாரதம் எழுதினரா ?

ம. இங்கே வாருமையா இப்படி—இன்னொருமுறை என்னை இப்படிப்பட்ட கேள்விகள் கேட்டால் எனக்குக் கோபம் வரும், தெரியுமா ? போம்.

தி. சந்தோஷம். [போகிருன்.]

வ. ராஜ குமாரா, இதோ மாலை.

கி. இதோ மாலை.

வ. என்னுடையதைத் தானே முன்பு வாங்கிக்கொண்டீர் ?

ம. இதென்ன என்னைப் பிடித்த தொந்தரவு எப்பொழுதும் விடாதுபோ லிருக்கிறதே!—போனற் போகிறது. வேடிக் கையாக விளையாடினேன். இன்றைத்தினம் அமாவாசியை யல்லவா? விரதம் கெட்டுப்போம். வனஜா, நீ போய் உடனே தர்மபாலனை நான் அழைப்பதாக அழைத்துவா, நான் பிதாவின் சமாதிக்குப் போகவேண்டும்.

வ. இதோ அழைத்து வருகிறேன்.

[போகிறதுபோல் நடித்து திரும்பி வந்து மறைந்து நிற்கிருள்.]

ம. கிரிஜா, இதற்குள் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிருயே! நான் வேண்டுமென்றே வனஜாவை அனுப்பிவிட்டேன். நான் நல்ல யுக்திசெய்ய வில்லையா ?

கி. நானும் நல்ல யுக்தி செய்யவில்லையா ?

[மதனமோஹனன் கிரிஜாவுக்கு முத் தம் கொடுக்கிருன்.]

வ. [வெளிவந்து] நானும் நல்ல யுக்திசெய்யவில்லையா ! சபாஷ்! சரி ! அமாவாசியை விரதம் என்னவாயிருக்கிற திப் பொழுது அரசே ! ஓஹோ ! எனக்கு மாத்திரம்தான் விர தமோ ? கிரிஜாவுக்கில்லையோ ? ஏன் கிரிஜா ! என் முகத்

தைத் திருப்பிக் கொள்ளுகிறாய்! உனக்குத் தினம் அமா வாசியையாயிருந்தால் நலமாயிருக்காதா? ஏன், நான் முன்பு கூறிய துண்மைதானே? ராஜகுமாரா, உமதிரு கண்களில் ஒன்றில் பார்வை மட்டுதானே! என்ன சும்மா யிருக்கிறீர்? நியாயமாவது கூறும், தப்பென்றாவது ஒப் புக்கொள்ளும்.

கி. அக்காள்! இதற்குள்ளாக என்ன பொறுமை யடியம்மா!

ம. சரி! ஆரம்பித்து விடாதீர்கள். வனஜா, கிரிஜா, இதென்ன இது? நீங்களிருவரும் சகோதரிகளைப் போல் ஒருமையா யிருப்பதை விட்டு எந்நேரமும் இப்படி சச்சரவிட்டுக் கொண் டிருக்கிறீர்கள்? உத்தம ராஜ ஸ்திரீகளாகிய உங் களுக்கு இது அழகன்று.

கி. இல்லை அரசே!

வ. அப்படி யொன்று மில்லை அரசே!

ம. வாருங்கள் போவோம் அரண்மனைக்கு, நேரமாய்விட்டது.

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்—இடுகாடு.

ஒருபுறமாக ஒரு சமாதி இருக்கிறது.
விநயேந்திரன் மெல்ல வருகிறான்.

வி. சீ! வயிற்றிற் பிறந்த வாஞ்சையானது என்னை என் னென்ன தீய தொழிலுக் கெல்லாம் ஆளாக்குகிறது? —இனி யோசிப்பதிற் பயனில்லை, நேரமாய்விட்டது— விரைவில் நமது வேலையை முடித்துக்கொள்ள வேண்டும். மதனமோஹனன் சீக்கிரத்தில் வந்துவிடுவான்.—ஒருவரு மில்லை! இதுதான் தக்க சமயம்—அண்ணா ஜெயகேது! என்னை மன்னிக்கவேண்டும் தாம்.—

[சமாதி யருகிற் சென்று மறை வா யமைக்கப்பட் டிருக்கும்

[ஒரு விசையை முடுக்க, ஒரு மாடம் திறக்கிறது. அதில் வைத்திருக்கும் ஒரு சிறு பெட்டியைத் திறக்கிறான்.]

ஆ! நாம் நினைத்தவண்ணமே இருக்கிறது, ஒரு நிருபம் தான். என்ன எழுதியிருக்கிறாரென விரைவிற் பார்ப்போம். [படித்துப் பார்க்கிறான்.]

ஐயோ! தன் மைந்தனுக்குத் தகுந்த புத்திமதிகளைக் கூறியிருக்கிறார். ஐயோ! இவைகளை நானும் மேற்கொண்டு துர் விஷயங்களில் பிரவேசிக்கா திருக்கலாகாதா? என் விதி! என் விதி!—சீ! இப்படியே இதை வைத்துவிடவா? ஐயோ! அப்படிச் செய்வேனாயின் என் பெண் கட்டாயமாக இறப்பாள். அவளோ, மணந்தால் மதனமோஹனனை மணப்பது, இல்லாவிடின் இறப்பது, என்றிருக்கிறாள். இதற்கு நான் என்ன செய்வது? ஈசா! ஈசா! என்னை மன்னிப்பீராக—இனி யோசியேன்.

[அந்த நிருபத்தைத்தான் எடுத்துக்கொண்டு, தான் கொண்டுவந்த நிருபமொன்றை அப் பெட்டியில் வைத்து விடுகிறான்.]

ஜெயகேது! ஜெயகேது! என்னை மன்னியும்.—அதோ ஆளரவம் கேட்கிறது. மதனமோஹனன் வருகிறான் போலிருக்கிறது. நான் இனி இங்கிருக்கலாகாது, விரைவில் அவர்கள் காணாதபடி செல்லவேண்டும்.

[பெட்டியை மூடி மாடத்தில் வைத்து, விசையால் அதை மூடிவிடுகிறான்.]

அதோ வருகிறார்கள்.

[விரைந்து போகிறான்.]

மதனமோஹனனும், தர்மபாலனும் மற்றொரு புறமாக வருகிறார்கள்.

த. அரசே! இத் துர்ச்சகுனங்களைக் குறித்துத் தாம் கவலைப்பட வேண்டியதில்லை. அவைகளெல்லாம் என்னைப் பற்றினவைகளா யிருக்கலாகாதோ? தாம் ஏன் தமக்குத் தான், ஏதோ பெருந் தீங்கு நேரிடப் போகிறதென்று எண்ணவேண்டும்?

ம. நம்மிருவருள் யாருக்குக் கெடுதி நேர்ந்தால்தா னென்ன? பேதமொன்று மில்லையே.

த. அப்படி ஒன்றும் நேரிடாது. இதென்ன வேடிக்கையா யிருக்கிறது? ஆகாயத்திற் பறக்கும் பட்சிகளெல்லாம் நமக்கென்றே வலமும் இடமுமாகப் பறக்கின்றனவோ? அவைகளுக்கு வேறு வேலை யில்லையோ? காக முதலிய அற்ப பிராணிகளுக்கு நமக்கு வரப்போகிற நன்மை கெடுதிகள் எப்படி முன்பே தெரியும்? ஐயனே! எல்லா மறிந்த தமக்கு நான் இவ்வளவு கூறவேண்டுமா?

ம. நண்பா, இவைகளெல்லாம் என் மனத்தைக் கலக்கவில்லை. ஆயினும் இன்றைத்தினம் விழித்தது முதல் எனக்கொரு வாறு யிருக்கிறது. ஏனோ அறிகிலேன் நான்—சரி, அருகில் வந்துவிட்டோம். இனி இப்பேச்சை நிறுத்திவிடுவோம்.

[சமாதி யருகிற் போகிறார்கள்.]

தோழா! நான் நேற்றைத்தினம் இட்ட புஷ்பத்தை யாரோ கலைத்திருக்கின்றனர் பார்த்தாயா?

த. ஏதாவது பட்சிகளின் வேலையா யிருக்கும்.

ம. தோழா! அந்த மல்லிகை மாலை எங்கே? கொண்டுவர மறந்துவிட்டோமா என்ன?

த. இல்லை இல்லை. இதோ இருக்கிறது பாரும்.

ம. கொடு இப்படி. எங்கு காணோமே என்று திடுக்கிட்டதெனக்கு.

த. ஐயனே, உம்மை நெடுநாளாகக் கேட்கவேண்டுமென்றிருந்தேன். அது ஏன் மல்லிகை யன்றி வேறு புஷ்பம் இங்கு பூஜைக்குக் கொண்டு வருவதில்லை?

ம. தர்மபாலா, என் பிதா விரும்பிய—மலர்—இது வொன்றே. வேறு எம்மலரின்மீதும் அவருக்கு விருப்பமில்லை.—அவர்—இறப்பதற்கு—ஒரு வருஷத்திற்கு முன்பு—ஒரு நாள், நாங்களிருவரும், உணவு கொண்டபின் அரண்மனை நந்தவனத்தைச் சுற்றிவரச் சென்றபோது, புஷ்பங்களின் திறத்தைப்பற்றி வார்த்தை வர, நான் அழகிய ரோஜா

மலரை வியந்தேன். அவர் தான் விரும்பியது மல்லிகை யொன்றேயென்று கூறினார். உடனே நான் சற்று பின் தங்கி, அவரறியாதபடி அழகிய மல்லிகை மலர்களை விரைவிற் கொய்து, மாலையாகத் தொடுத்து, அவர் முன்பாக உலாவிச் சென்றவிடம்போய், அவர் பாதத்தில் வைத்துப் பணிந்து நின்றேன்—அவர்—உடனே—என்னை—வாரிக் கட்டி யணைத்து—

த. அரசே! அரசே! இதென்ன இன்னும் உமக்கு மனோதிடம் வரவில்லையா? ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? தாம் தைரியப்படுத்திக் கொள்ளும் மனத்தை. நான் என்ன தைரியம் சொல்லக் கூடும் தமக்கு?

ம. தோழா! என்னைச் சற்று மன்னிப்பாய்—

[சமாதியைப் பூசித்து வலம்வந்து பணிகிறான்.]

த. முடிந்ததா?—ஐயனே, நேரமாய்விட்டது அதிககாலம் தாமதித்து விட்டோம் போவோமா அரண்மனைக்கு? வாரும். இருட்டிவிட்டது. அதிலும் பாதசாரியாய் வந்திருக்கிறோம். வாரும் வாரும், இங்கிருக்கும் வரையில் உமது மனம் இப்படித்தா னிருக்கும்.—

ம. தோழா, இன்றைத்தினம் என் தகப்பனாருடைய மரண சாசனப்படி, இங்கு மேற்கு மூலையில் புதைத்திருக்கும் பேழையைத் திறந்து பார்க்கவேண்டுமல்லவா? இன்றைக்கு எனக்கு இருபத்தொரு வயது பூரணமாய தல்லவா?

த. ஆம் ஆம் உண்மையே. சீக்கிரம் திறந்து அப்படியே பெட்டியை எடுத்துக் கொண்டுபோய் சாவகாசமாய்ப் பார்ப்போம்.

ம. இல்லை இல்லை. இப்பொழுதே எல்லாம் கண்டறியவேண்டும், நான் ஒரு க்ஷணமேனும் பொறுக்க முடியாது.

[விசையிருக்கும் மூலை யருகிற்போய்]

தோழா, இங்கு இந்தப்பெட்டியை சூழ்ச்சியாகப் புதைத்திருப்பது, நம்மிருவருக்கு மன்றி வேறு யாருக்கும்

தெரியாதல்லவா ? இதோ பார், என்ன எளிதில் மேலாகப் புதைத்திருக்கும் கல்வந்து விடுகிறது—இதோ பெட்டி இதோ பெட்டி !

[பெட்டியை வெளியில் எடுக்கிறான்.]

இதோ இத் தீப்பெட்டியை எடுத்து விளக்கை யேற்று. இதற்கென்றே இன்று இதை முன்ஜாக்கிரதையாகக் கொண்டு வந்தேன்.

[தர்மபாலன் ஒரு விளக்கை ஏற்றுகிறான்.]

இதுதான் இதன் திறவுகோல்—தோழா ! இதென்ன ? இதென்ன ? என் இடது தோள் இவ்வாறு துடிக்கிறதே !

த. ஐயனே, அதெல்லா மொன்றுமில்லை ; மிகவும் இருட்டி விட்டது. வாரும், அரண்மனைக்குப் போய் எல்லாம் பார்த்துக் கொள்வோமே ; இப்பொழுதே என்ன அவசரம் ? வாரும் வாரும்—

ம. ஒரு க்ஷணமும் என்னால் பொறுக்க முடியாது.

[திறந்து அதிலிருக்கும் நிருபத்
தை வெளியில் எடுக்கிறான்.]

பார்த்தாயா ! நான் அப்பொழுதே சொல்லவில்லையா ஒரு நிருபமாகத்தானிருக்க வேண்டுமென்று ? என்ன எழுதியிருக்கிறது பார்ப்போம். "இருபத்தொரு வயதை யடைந்த என்னருமைப் புதல்வன் மதனமோஹனனுக்கு."

[நிருபத்தி லெழுதி யிருப்பதை விரைவா
கத் தனக்குள்ளே படித்துப் பார்த்து.]

தோழா !—தோழா !—இதென்ன நான் கனவு காண்கிறேனோ ?—நான் காண்பது உண்மையோ ?—

த. அரசே ! என்ன ? என்ன ?

ம. தர்மபாலா ! இதைப் படித்துப் பார் ?

[கடிதத்தை அவனிடம் கொடுக்கிறான்.]

த. [படித்துப் பார்த்து] என்ன ஆச்சரியம் !—ஜெயகேது மன்னன் கிரிஜாவை யன்றி வேறொரு பெண்ணை விவாகம் புரியும்படி உமக்குக் கட்டளை யிடுவாரோ ?—ஆயினும் இதி

லொரு சந்தேகமுமில்லை, ஸ்பஷ்டமாகத்தா னெழுதியிருக்கிறது—அவருடைய கையெழுத்தே!

ம. தோழா!—நாம் எங்கிருக்கிறோம்?—தர்மபாலா, அதை உரக்கப்படி, நான் கேட்கவேண்டும்.—நான் இதை எப்படி நம்புவது?—என் பிதா எனக்கிவ்வாறான கட்டளையிடுவாரோ?—படி—படி—

த. [படிக்கிறான்] "கண்ணே! மதனமோஹனா! நீ இதுவரையில் என் மரணசாசனத்தில் உனக்குக் கட்டளை யிட்டிருக்கிறபடி யெல்லாம், நடந்து வந்திருப்பாய் என்பதற்குச் சந்தேகமில்லை. என்னருமை மைந்தன் என் கட்டளைப்படி நடப்பான் என்பதற்குச் சந்தேகமென்ன? அப்பா! இனி உனக்கு நான் இடவேண்டிய கட்டளை ஒன்றே இருக்கிறது. அதையும் நீ நிறைவேற்றுவா யென்பதற்குச் சந்தேகமில்லை. என் கடைசி கட்டளை யிதுவே—உனக்கோ இனி விவாஹ மாகவேண்டிய காலம் வந்து விட்டது. ஆகவே, நான் உயிருடன் இருக்கும்பொழுது கண்டு மகிழாததை, நான் உனக்குக் கட்டளை யிட்டாவது மகிழ்கிறேன். உனக்கேற்ற பெண் இவ்வுலகில் ஒருத்தியே இருக்கிறாள்—வனஜா."

ம. யார்? யார்?

த. "வனஜா."—

ம. நன்றாகப்பார்! நன்றாகப்பார், தோழா நன்றாகப்பார்!

த. அப்படித்தான் எழுதி யிருக்கிறது.

ம. உம்!—பிறகு?

த. "அப் பெண்மணியையன்றி வேறொரு ஸ்திரீயையும் நீ தீண்டலாகாது. இதுவே என் கடைசிகட்டளை. கண்ணே! ஈசனருளால், உன்னைப்போன்ற நற்குணமுடைய புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று நெடுநாள் வாழ்ந்திருந்து, பிறகு நீ என்னிடம் வந்து சேர்வாயாக! இப்படிக்கு, எக்கட்டளை யிட்டபோதிலும் அதை நிறைவேற்றும்படியான புத்திரனைப் பெற்றேன் என்று கர்வமுற்ற—ஜெயகேது"

ம. நான் உயிரோடு—விழித்திருக்கிறேனு?

த அரசே, இதில் ஏதோ—சந்தேகம்—

ம. ஒன்றும் பேசாதே !—இப்படிக் கொடு அந் நிருபத்தை.

த. ஐயனே ! தாம் ஒன்றும் அவசரப்பட வேண்டியதில்லை.

ம. ஸ் !—தர்மபாலா,—இனி என்னை எப்பொழுதும் ஜெய கேதுவின் குமாரன் என்றழை—தெரியுமா ?

த. ஏன் ?—

ம. அப்பொழுதுதான் என் பிதாவின் கட்டளை எனக்கு ஞாபகமிருக்கும்.

த. ஆனல்—இக் கட்டளைப்படி—நடக்கத் தீர்மானித்து விட்டீரோ ?

ம. என்ன சொன்னுய்? தர்மபாலா ! நீயானதுபற்றி உயிர் பிழைத்தாய்.— மறுபடியும் இன்னொருமுறை என்னை அவ்வாறு கேட்காதே !

த. அரசே ! தாம் அவசரப்பட் டொன்றும் தீர்மானிக்கலாகாது. இதில் ஏதோ தவறிருக்கிறது. உம்முடைய பிதா எப்பொழுதும் கிரிஜாவையே மிகவும் பாராட்டி வந்தனரன்றே ? இரண்டொரு முறை வேடிக்கையில் தன் மருமகளென்று அவளை அழைத்ததையும் நான் கேட்டிருக்கிறேன். அவர், எல்லோரையும்விட்டு, வனஜாவை விவாகம் புரியும்படி உமக்குக் கட்டளையிடுவாரோ? இதென்ன இது? தாம் வனஜாவை மணம் புரிவதாவது?

ம. ஆம்—என்னுடன் பேசாதே மறுபடியும் இதைப்பற்றி.

த. பிறகு கிரிஜாவின் கதி என்னவாவது?

ம. கிரிஜா—இறப்பது.

த. பிறகு?

ம. பிறகு நானும் இறப்பது—எழுந்திரு நேரமாய்விட்டது.— ஐயனே ! ஐயனே ! எது எப்படியாயினபோதிலும் உமது கட்டளையை நிறைவேற்றுகிறேன்—பிறகு இறக்கிறேன்— உம்மிடம் வருகிறேன் !

[சமாதிக்கு மறுபடியும் நமஸ்காரம் செய்துவிட்டு, தர்மபாலனுடன் விரைவில் போகிருன்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி.

இடம்—அரண்மனையை யடுத்த பூங்தோட்டம்

வனஜா வருகிருள்.

வ. இது ஏதோ பிதாவின் சூழ்ச்சியாகத்தானிருக்கவேண்டும். —இல்லாவிடின்—ஒருவேளை உண்மையிலேயே இளவரசர் மனம் மாறியிருக்கிறதோ?—எனக்கென்னவோ சந்தேக மாகத்தா னிருக்கிறது. இல்லாவிட்டால் இத்தனை வருஷ காலமா யிராது, இப்பொழுது மாறுவானேன்? அதுவும் திடீரென்று அவருக்கு கிரிஜாவின் மீதிருந்த காதலெல் லாம் மாறி என்மீது காதல் கொள்வாரோ? கிரிஜாவை இரண்டு மூன்று தினங்களாகப் பார்க்கவு மில்லையாம்— என்ன ஆச்சரியம்! முன்பிருந்ததைவிட பதின்மடங்கதிக மாக என்மீது ஆசையுள்ளவரா யிருக்கிரு ரென்பதற்கு என்னவோ சந்தேக மில்லை. ஆயினும் என்மீது காதல் கொண்டிருக்கிருரோ என்னவோ, அது மாத்திரம் சந்தேக மாகத்தா னிருக்கிறது. ஆ! உண்மையில் காதல்கொண் டிருப்பதானல், என்னைப் பார்க்கிலும் பாக்கியசாலிகளும் இவ்வுலகில் உளரோ? ஆயினும் அவர் கிரிஜாவை வெறுக் கும்படி நான் கூறவில்லை. ஐயோ! பாபம்!—ஏன் அவர் எங்களிருவரையும் மணம் புரியலாகாது? ஆனல், சிறு வயது முதல் தான் ஒரு பெண்ணையே விவாகஞ் செய்துக் கொள்ளப்போகிறதாகக் கூறியிருக்கிருர்!—ஈசன் விதித்த படி எப்படியோ?

[அங்கிருக்கும் ஓர் மேடையின்மீது உட்காரு கிருள். மதனமோஹனன் பின்புறமாக வந்து அவள் கண்களைப் பொத்துகிருன்.]

வ. யார் அது!—கிரிஜா?—சசிவதனு?—ஹம்சவேணி?— யார் அது? தெரியவில்லை!—

ம. இவ்வளவுதானு? என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லையே உன்னல்!

வ. அரசே!—கண்டு பிடித்திருப்பேன்—ஆயினும் தாம் ஏது இந்த பக்கம் திரும்புவதென்று நினைத்தேன்.

ம. ஏன் நேற்று வரவில்லையா? முந்தியதினம் வரவில்லையா? அதற்கு முன்தினம் வரவில்லையா?

வ. வழி தப்பி—

ம. சீ! விளையாடாதே!—ஏன் நிற்கிறாய்? உட்கார்—என்ன நகைக்கிறாய்?—

வ. இல்லை, ஏது திடீரென்று என்மீது அவ்வளவு கருணைவந்த தென நினைத்தேன்—அரசே, கிரிஜா எங்கே? இரண்டு தினங்களாக நான் பார்க்கவில்லை. உடம்பொன்றும் அசௌக்கிய மில்லையே?

ம. நான் நினைக்கவில்லை.

வ. ஏன், நீர் நேரில் பார்க்கவில்லையோ இத்தினங்களெல்லாம்?

ம. இல்லை.

வ. ஏன்?

ம. காரணம் அப்புறம் சொல்லுகிறேன். வனஜா, நான் உன்னை யொன்று கேட்கிறேன், எனக்கொன்றும் ஒளி யாது நேராகப் பதில் கூறுகிறாயா?

வ. அரசே, அதென்ன அப்படிக் கேட்கிறீரே? கேளும்

ம. பெண்ணே, நான் உன்னை விவாகம் புரிதல், உனக்குச் சம்மதிதானா?—நீ என்மீது உண்மையில் காதல்கொண் டிருக்கிறாயா?—என்ன சும்மா யிருக்கிறாய்?—நாணப் படாதே!—என்னை நீ பிறந்தது முதல் அறிவாயே.

வ. அரசே, தாம் கிரிஜாவின்மீது—

ம. பெண்ணே, நான் உன்னை வேண்டிக்கொள்கிறேன், என் னிடம் கிரிஜாவைப்பற்றி ஒன்றும் கேளவும் கேளாதே கூறவும் கூறாதே!

வ. ஏன்? அவள்மீதென்ன கோபம்?

ம. ஐயோ! எனக்குப் பயித்தியம் பிடித்துப் போம், கேளாதே!

வ. உமதிஷ்டம்.

ம. என்ன நான் கேட்டதற்கு பதில் கூறவில்லை?

வ. அரசே, நீர் என்மீது காதல்கொண்டிருக்கிறீரா உண்மை யில்? அதை முன்பு கூறும்.

ம. பெண்ணே, அதெல்லாமுனக் கெதற்கு? நான்—உன்னை மணம் புரிகிறேன்—உனக்கிஷ்டமானால்; என்ன சொல்லு கிறாய்?

வ. உமதிஷ்டம்.

ம. ஆனால் நீ என்மீதுண்மையில் காதல்கொண்டிருக்கிறாயோ?

வ. பிராணநாதா!—அதை நான் வாயால் கூறவும் வேண்டு மோ?—பிராணநாதா! நான் சிறு வயது முதல் உம்மை யே கோரி வந்தேன் என்பது நீர் அறியாத விஷயமன்று, நீர் என்னை மணம் புரியாவிட்டால் இவ்வுலகில் வேறொரு வரையும் மணம் புரிவதில்லை என்று நெடுநாளைக்கு முன் னமே தீர்மானித்துவிட்டேன்.

[அவளைக் கட்டி முத்தமிடுகிறான்.]

ம. ஆனால் சரிதான்—சரிதான்—நான் உன் பிதாவிடம் போய் உனக்குச் சம்மதிதானெனக் கூறி விவாகத்திற்கு உடனே சித்தம் செய்யச் சொல்லவா?

வ. உமதிஷ்டம். ஆயினும், பிராணநாதா, இப்பொழுதே உம்மை ஒன்று வேண்டிக்கொள்ளுகிறேன். இப்பொழுது என்னை மணம் புரிவதாகக் கூறிவிட்டுப் பிறகு நீர் வாக்கை மாற்றலாகாது, மறக்கலாகாது. அப்படி யேதாவது நேருமாயின் என்னுயிர் போம்.—

ம. இல்லை, இல்லை. உன்னிஷ்டப்படியே ஆகட்டும்.

வ. பிராணநாதா! பிறகு நீர் மாற்றலாகாது.—வேண்டுமென் றால் இப்பொழுதே சொன்னேன்—கிரிஜாவை மாத் திரம்—

ம. ஐயோ! அவளைப்பற்றி எனக்கொன்றும் ஞாபகப்படுத் தாதே. நான் வருகிறேன். உன் தந்தையிடம் போக வேண்டும் நான்.

[விரைந்து போகிறான்]

வ. இன்றே என் ஜன்மம் சபலமாயது! என் பிராணநாதர் வாயால் என்னை மணம்புரிவதாகக் கூற நான் கேட் டேனே! எல்லாம் என்ன திடீரென்று மாறியது! ஐயோ பாபம்! கிரிஜா!—எப்படியும் நம்மிருவரையும் மணந்தால்

நலமாயிருக்கும். உனக்கென்மீது பொறுமையாயிருந்தும், உன்மீதெனக்குப் பொறுமை யில்லை.

[போகிறாள்.]

காட்சி முடிகிறது.

நான்காம் காட்சி.

இடம்—பூந்தோட்டத்தில் மற்றொரு புறம்.

மதனமோஹனனும், தர்மபாலனும் வருகிறார்கள்.

த. ஐயனே! எனக்கென்னவோ, முடிவில் எல்லாம் சுபமாய் முடியுமென்று ஏதோ தோற்றுகிறது. அதற்குக் காரண மென்ன வென்றென்னைக் கேளாதீர். காரணமொன்று மறியேன் நான். எது எப்படி நடந்தேறியபோதிலும் நம் மைக் காக்க ஈசனொருவரிருக்கிறார். அவரருளின்முன் மற்றவைகளெல்லாம் எவ்வளவு?

ம. ஈசனிருக்கிறார்!—தோழா, அந்நிருபத்தை நீ கொடுத்த பொழுது என்ன சொன்னாள்?—என்ன நடந்தது? ஒரு வார்த்தையும் விடாது ஆதியோடந்தமாக என் பாழும் செவியால் நான் கேட்கக் கூறுவாய்.

த. ஐயனே! என் வாயாற் கூறவும் நா எழவில்லையே! மரண ஓலையைக் கொண்டுபோவான் போல், நான் ஒன்றுங் கூறாது, நீர் கொடுத்த நிருபத்தைக் கையில் கொடுத்தேன். அதைப் படித்துப் பார்த்தவுடன் வீரவேடன் கணைபட்ட மானைப்போல் துடித்து வெருண்டு கீழே விழுந்தனள்.

ம. ஈசனே! ஈசனே!—பிறகு பிறகு?

த. பிறகென்ன? அரசே! அதிகமாகச் சொல்வானேன். கிரி ஜாவை நீர் உயிருடன் மறுபடியும் காண்ப தரிது. வேரு டன் கொளுத்திவிட்டால், இம்மல்லிகைச் செடி வாடாது நிற்குமோ?

ம. ஐயோ! நண்பா நண்பா! என் காதலியை நான் கொன் றேன் கொன்றேன்! நானிவ்வுலகில் இனி வாழ்வதோ வாழ்வதோ?

த. அரசே! இன்னும் தைரியத்தைக் கைவிடாதீர். இதற்குள் ஒன்றும் காரியம் மிஞ்சிவிட்டிருக்காதென்றெண்ணுகிறேன். தாம்போய் ஏதாவது—தேறுதல் சொன்னால் நலமா யிராதோ?

ம. தோழா, என்ன ஒன்றும் யோசியாது பேசுகிறாய்? என் காதலியை எங்கு நேரிற் கண்டால், என் தீர்மானங்களெல்லாம் பறந்தோடிப் போகின்றனவோ என்றே, உன்னிடம் அந்நிருபத்தைக் கொடுத்தனுப்பியது. இப்பொழுது நேரிற் காண்பேனாயின்!—ஐயோ! என் தந்தையின் கட்டளையை நிறைவேற்றல் அசாத்தியமாமே!—

த. பிறகென்ன செய்வது?

ம. ஐயோ! அதைத்தானறியாது அனலிற்பட்ட புழுவைப் போல் துடிக்கிறேன்!—

த. ஐயோ! கிரிஜா! உன் தலைவிதி யிப்படியும் இருந்ததா! இவ் விள வயதில் இத்துன்பமெல்லாம் அனுபவித்து நீ யிறக்கவேண்டி—

ம. ஐயோ! நண்பா! நண்பா! என்னை உயிருடன் கொல்லாதே! கொல்லாதே! அவ்வார்த்தையைக் கேட்டதும் என் பிராணனை ஹிம்சிக்கிறதே! ஆ! அவளிறக்க நான் பொறுத்திருப்பதோ? தோழா! நீ எப்படியாவது போய் அதைத்தடுப்பாய்! எழுந்திரு எழுந்திரு! நான் தான் கட்டுப்பட்டிருக்கிறேன் பாவி! நீ எனக்கிவ்வளவு உபகாரம் செய்யலாகாதா? நீ எப்படியாவது, என்ன சொல்லியாவது, கிரிஜாவை தற்கொலை புரியாமலிருக்கும்படிச் செய். நான் உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். என் பொருட்டு நீ இவ்வளவு செய்யலாகாதா?

த. அரசே! வீணில் உமக்குப்போக்குச் சொல்ல எனக்கிஷ்டமில்லை. அதைத் தடுப்பதற்கு ஒரே மார்க்கம் தான் உண்டு. தாம் அக்கடிதத்தில் எழுதியதை மீட்டுக் கொண்டாலொழிய அவள் உயிர் தரியாள்.

ம. நண்பா! நண்பா! அது அசாத்தியம் அசாத்தியம்! தோழா! என்மீது உனக்கிவ்வளவு கிருபை யில்லையா?

நான்படும் துயரம் சற்றும் அறிகிலையோ? நான் இவ்வளவு வேண்டிக் கொள்ளுகிறேனே என்றாயினும் கிரிஜாவிடம்போய், சற்று பொறுக்கும் படியாகவாவது கேட்க மாட்டாயா? தர்மபாலா! இதுவோ உன்நட்பின் திறம்?

த. அரசே! என்னை வெறுக்காதீர். அசாத்திய மானகாரியம். ஆயினும் போய்ப் பார்க்கிறேன். வீணில் என்னை வெறுக்க வேண்டாம். இப்பொழுதே சொன்னேன். பிறகு உம திஷ்டம். ஸ்வாமி யிருக்கிறார்.

[போகிறான்.]

ம. எங்கே யிருக்கிறார்?—ஈசனே! ஈசனே! என்னை இக்கோலம் காண்டல் உமக்கழகோ? உம்மையே மெய்யன்புடன் இது வரையில் பணிந்து வந்ததற்குப் பலனிதுவோ? ஆபத்பாந்தவா அநாதரட்சகா! உமது தொண்டன் கூவியழைப்பது உமது செவிக் கெட்டவில்லையோ? ஈசனே! ஜகதீசா! இனியாவது தாம் கருணைகூர்ந்து என்னைக் காக்கலாகாதா?—ஐயோ! என் காதலி என் நண்பன் செல்லுமுன் இறந்திருப்பாளாயின் என் கதி என்னவாவது? அவளோ உயர்குலத்துதித்த உத்தமி; என் மீது அவள்கொண்ட அழியாக் காதலுக்கு நான் எழுதிய நிருபத்தைக் கண்டும் உயிர் தரிப்பாளோ அரை க்ஷணமும்?— கண்ணே! கண்ணே! உன்னைக் கொன்ற கொடும் பாவி யாகிறேன்!

[மூர்ச்சையாகிறான்.]

கிரிஜா மெல்ல வருகிறாள்.

கி. ஈசனே! அடியாள் உமது பாதத்தைப் பூஜித்தது உண்மையானால் இப்பொழுதுதான் நீர் உதவவேண்டு மெனக்கு.—தர்மபாலர் கூறிய துண்மைதான். அதோ சோகத்தினால் நிலை தளர்ந்து மூர்ச்சையா யிருக்கிறார்—பிராணநாதா! என் பொருட்டு உமக்கிவ்வளவு கஷ்டமா? ஆ! என் காதலரை இக்கோலத்தில் கண்டும் உயிர் தரித்திருக்கிறேனே! ஐயோ! இவருக்கு மூர்ச்சை தெளிவிக்கலாமென்றாலும் என் மனம் நடுங்குகிறதே! பிராணநாதா

உம்மை இக்கோலத்தில் கண்டும் உமக்கு உபசாரம் செய்யச் சக்தியற்றவளா யிருக்கிறேனே!— ஆ! நம்முடைய பிராணநாதர், தான் என்னை இனி என்னைத் தீண்டலாகாதென்று தானே கூறினர்; நான் அவரைத் தீண்டலாகாதென்று கட்டளை யிடவில்லையே! இது தான் யுக்தி!

[அருகில் உட்கார்ந்து தன் மடிமீது அவன் தலையை வைத்து சைத்யோபசாரம் செய்கிருள்.]

பிராணநாதா! பிராணநாதா! உம்முடைய கரத்தால் எப்படி அக்கொடிய நிருபத்தை எனக் கெழுதினீரோ! உமக்கு மனம்தான் எப்படித் துணிந்ததோ?—ஐயோ? உம்மை வெறுப்பதில் என்ன பிரயோஜனம்? எல்லாம் உம்முடைய பிதாவின் செயல். ஐயோ! அவருடைய கட்டளையை நீர் ஒருகாலும் மீறி நடக்கமாட்டீரே உமது உயிர் போவதா யிருந்தபோதிலும்! இதற்கு நான் என்ன செய்வது? பிராணநாதா! பிராணநாதா! நீர் விழித்தவுடன் என்னை வெறுப்பீராயின் என் கதி என்ன வாவது?—என்ன இன்னும் களைதீரவில்லை?—ஒரு யுக்தி தோன்றுகிறது.—ஆம், வேறு வழியில்லை. இப்பொழுது தான் களைதீர்கிறுற்போ லிருக்கிறது.

[அவன் தலையைத் தரைமீதுவைத்து விட்டு விரைந்து போகிருள்.]

ம. [மூர்ச்சை தெளிந்து] ஆ! நான் கண்டதெல்லாம் கனவோ? ஆம் ஆம் கனவுதான்—ஐயோ! நான் கனவிலாயினும் என் காதலியைத் தீண்டப் பெற்றேனே! என் காதலி பரிவுடன் இங்கு வந்து, தன்னழகிய மடியின்மீது என் முடியை வைத்து, சைத்தியோபசாரம் செய்து எனக்கு முத்தமிட்டதாகக் கனவு கண்டேன். ஐயோ! ஏன் அதனை விழித்துப் பொய்த்திட்டேனே!— இதிருக்கட்டும். போன தர்மபாலன் ஏன் இன்னும் வரவில்லை? என் காதலியின் கதி என்னவாயதோ அறியேனே! ஈசா! ஈசா!—இது யார்?—

சன்யாசி வேஷத்துடன் கிரிஜா வருகிறாள்.

கி. ஐயா,—ராஜ குமாரா, நான் அகஸ்மாத்தாய் இங்கு வந்து கொண்டிருக்கும்பொழுது, யாரோ ஒரு பெண் —ஒரு ராஜகுமாரியைப்போல் தோற்றப்பட்டாள்—இந் நிருபத்தை என்னிடம் கொடுத்து, இதை உம்மிடம் எப்படியும் கூடிய சீக்கிரத்தில் சேர்ப்பிக்கும்படி கூறி விட்டு, விரைந்து எங்கேயோ சென்றனள். இதோ நிருபம்.

ம. [நிருபத்தைப் பிரித்துப் படித்துப் பார்த்து] கிரிஜா! கிரிஜா!— [கீழே விழுகிறான்.]

கி. என்ன? என்ன?

ம. கண்ணே! கண்ணே!—ஐயோ நான் நினைத்த வண்ணமே முடிந்ததே முடிந்ததே! கண்ணே கண்ணே! இறந்தனையோ? என்னை நீ மறந்தனையோ? மேலுலகத்திற்குப் பறந்தனையோ? தேவமாதரிற் சிறந்தனையோ? என் காதலியே! என் கண்மணியே! என்னை வெறுத்துச்சென்றது உனக்கழகோ? நீதியோ? தர்மமோ? என் கண்ணின் கருமணியே! நான் என் செய்வேன்? என் செய்வேன்? உன்னைக் கொன்ற கொடும்பாவி யின்னும் இவ்வுலகில் உயிர்த்திருக்கிறேனே!—

கி. ராஜகுமாரா! என்ன சமாசாரம்? ஏன் இவ்வாறு வருந்துகிறீர்?

ம. ஐயா! தாம் ஏன் இப்பாவியைக் கேட்கிறீர்? இக்கொடும் பாவி தாம் பாதத்தால் தீண்டுதற்கும் பாத்திரமானவனல்ல! தான் காதல்கொண்ட பெண்ணரசியைக் கொன்ற கொடும் பாவி! கொடும் பாவி!

கி. ராஜ குமாரா வருந்தாதீர்! நீர் வருந்துவதைப் பார்க்க என் மனம் தாளவில்லை! அது ஏனப்படி? விளங்கச் சொல்லும்.

ம. யோகீஸ்வரரே! நானும் கிரிஜா என்னும் ஓர் அரச குமரியும் இளவயது முதல் இணைபிரியாது வாழ்ந்து வந்தோம்; நாங்களிருவரும் ஒருவர்மீ தொருவர் காதல்கொண்டு

மணம் புரிவதாகப் பிரமாணம் செய்திருந்தோம். திடீரென்று இறந்துபோன என் தந்தை, நான் வேறொரு பெண்ணை மணம்புரியவேண்டு மென்று கட்டளையிட்ட மரண சாசனம், என் ஊழ் வினையால், என் கையிற் பட்டது. என் தந்தை வாக்கைப் பரிபாலித்தலே என் முதல் நோன்பாதலால், அதன்படி நடக்கவேண்டி, என் காதலியாகிய கிரிஜாவுக்கு அவளை நான் மணம் புரியலாகாதென்று தெரிவித்தேன். அதனால் அவள் என்மேற் கொண்ட காதலால் உயிர் துறந்தாள்—ஐயோ! அவளை நான் கொன்றேன் கொன்றேன்! [தேம்பி அழுகிறான்.] சீ! இனி இவ்வுலகில் உயிர்வாழ்வது நியாயமன்று.

[தன் கட்கத்தை ஓங்கி தற்கொலை புரியமுயல்கிறான்.]

கி. இதென்ன சாகசம்! என்ன செய்யப்போகிறீர்? ஒரு அற்பபெண்ணுக்காகத் தாம் உயிரை மாய்த்துக் கொள்வதாவது?

ம. என்ன சொன்னீர்! இன்னொரு முறை என் காதலியைப் பற்றி அவ்வாறாக என்னிடம் கூற வேண்டாம். துறவறம் பூண்டிருப்பதால் உம்மீது நான் கோபங் கொள்ளல் நியாயமன்று. போம் நீர்! என் முன் நிற்கவேண்டாம்—

கி. ராஜ குமாரா! அவசரப்படாதீர்! ஐயோ! வீணில் ஏன் உமதுயிரை மாய்த்துக்கொள்கிறீர்? இதினின்றும் நீர் தப்புவதற்கு ஒரு மார்க்கமுமில்லையா?

ம. இல்லை—போம். என் காதலி இறந்தபின் நான் உயிர்வாழ்வதா? ஒருவராலும் என்னைத்தடுக்க முடியாது போம்! இங்கிராதீர்—

கி. என்னாலும் முடியாதா?

ம. உம்மாலும் முடியாது! மும்மூர்த்திகளாலும் முடியாது!

கி. கிரிஜாவால் முடியுமா?

ம. விளையாடாதீர் இச்சமயத்தில்! போம் அப்புறம்—எனக்குக் கோபம் வரும். உம்பருலகிற் சென்ற அவள் வந்து தடுக்கட்டும்!

கி. [தன் வேஷத்தைக் களைந்து] பிராணநாதா!

ம. ஆ!—கிரிஜா!

[அவளைக் கட்டியணைத்து]

கண்ணே கண்ணே! நான் உன்னை மறுபடியும் உயிருடன் காணப்பெற்றேனே! கிரிஜா! கிரிஜா!—நான் கனவு காண்கிறேனு என்ன?—நினைவா? நினைவா? நினைவா?

கி. இல்லை இல்லை! பிராணநாதா நினைவுதான். உட்காரும் ஏன் இவ்வாறு உமதுடல் நடுங்குகிறது? சற்று நிதானியும். நீர் என்னை மன்னிக்கவேண்டும். உமது நிருபத்தைக் கண்டு உண்மை யறிந்தவுடன், வேறு வழி யில்லையென்று நான் இவ்வாறு நடக்கவேண்டி வந்தது. உம்மை வருத்தியதற்காக மன்னிக்கவேண்டும்.

ம. கண்ணே கண்ணே! இப்படியும் நீ என் மனத்தைப் பரிசோதிக்கலாமா?

கி. இல்லை இல்லை. எங்கு உமக்கு என்மீதுள்ள காதல் குன்றியதோ என்று பயந்தேன்.

ம. கண்ணே! எனக்குன்மீதுள்ள காதல் குன்றுமோ? இப்படியா பரிசோதிப்பது எதற்கும்? நீ இறந்தாய் என்று கேட்டவுடன் நான் பட்ட துயரம் ஈசனே அறிவார்!—அதைக் கேட்டபின் இத்தனை நேரம் நான் மடியாது உயிர் வாழ்ந்திருந்தேனே என்று, எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது!

கி. போனது போகட்டும். இதென்ன சமாசாரம்? எனக்கு விளங்கச் சொல்லும், உம்முடைய பிதா என்ன கட்டளையிட்டார்? என்ன—

ம. கிரிஜா!—கிரிஜா!—அதோ பார்! என்பிதா வருகிறார்!

கி, எதோ? எதோ? பிராணநாதா! ஒன்றையும் காணேமே? எங்கே பார்க்கிறீர்?—ஐயோ!

ம. ஐயோ!—ஐயனே!—ஐயனே!—இல்லை! இல்லை! உமது கட்டளைப்படியே நடக்கிறேன் நடக்கிறேன்.—ஐயோ! சற்று பொறும்! சற்று பொறும்! ஐயோ! நான் சொல்வதைக் கேளும்! ஐயோ! இல்லை! இல்லை—

கி. பிராணநாதா! பிராணநாதா! இதென்ன யாரைப் பார்த்து பேசினீர்? இங்கொருவரும் வரவில்லையே!

ம. நீ பார்க்கவில்லையா?—என் பிதா வந்திருந்தாரே—

கி. உம்முடைய பிதாவாவது வருவதாவது? விளையாடுகிறீரா என்ன? உடம்பு அசௌக்கியமா?—இப்படி சற்று உட்காரும்—என்ன யோசிக்கிறீர் பிராணநாதா?

ம. கிரிஜா,—இனி—என்னைப் பிராணநாதா என்றழைக்காதே.

கி. ஓஹோ!—சரி!—நீர் என்னை கிரிஜா என்றழைக்காதீர்—

ம. ஏன்?—

கி. பிறகு சொல்லுகிறேன்.—பிராணநாதா, இதென்ன சித்தப்பிரமை?

ம. கிரிஜா!—நீ என்மீது காதல் கொண்டிருப்பது உண்மையா அல்லவா?

கி. பிராணநாதா! நீர் உமது வாயால் என்னை இக்கேள்வி கேட்பது நியாயமா?

ம. நான் கேட்பதற்கு பதில் சொல்—உண்மையா அல்லவா?

கி. உண்மைதான்.

ம. ஆனால், என்பொருட்டு நீ எதையும் செய்வாயா?

கி. என்னால் கூடுமான எக்காரியமும் செய்வேன். என்ன பிராணநாதா?—

ம. கிரிஜா! என்னருகில் வாராதே! நில்—நீ என்மீது காதல் கொண்டிருப்பது உண்மையானால்—நிஜமானால்—இந்த க்ஷணம் இவ்வுலகில் மதனமோஹனன் என்றொரு ராஜகுமாரன் இருக்கிறான் என்பதையே மறந்துவிடு. நான் உன்னை விவாகம் புரிய—முடியாது. என் பிதாவின் கட்டளையை நான் நிறைவேற்றவேண்டும்.

கி. ஓஹோ! மறுபடியும் வந்ததா?—சரி, உமது பிதா என்ன கட்டளை யிட்டார்?

ம. நீ அந்நிருபத்தைப் பார்க்கவில்லையா? சற்று முன்பாகக் கேட்கவில்லையா?—வனஜாவை யன்றி வேறொரு பெண்ணையும் நான் மணம் புரியலாகாதென்று கட்டளையிட்டிருக்கிறார்.

கி. சரிதான்—பிறகு?

ம. பிறகு ஒன்றுமில்லை—கிரிஜா—

கி. நான் அப்பொழுதே சொன்னேனே, என்னை கிரிஜாவென்றழைக்கவேண்டாமென்று.

ம. ஏன்?

கி. என் பெயர் கிரிஜா அன்று.

ம. உனக்கென்ன பயித்தியம் பிடித்திருக்கிறதா கிரிஜா?

கி. என் பெயர் கிரிஜா அன்று.

ம. பின்னை யென்ன?

கி. வனஜா.

ம. வனஜாவாவது? — மெல்லபேசு. — இன்னும் மறையவில்லை!

கி. பிராணநாதா, நான் சொல்வதைக் கேளும். உம்முடைய பிதா வனஜாவைத்தானே மணம் புரியும்படி கட்டளையிட்டார்? என் பெயர் வனஜா, என்னை மணம் புரியும். வனஜா என்று என் பெயரை மாற்றிக்கொண்டேன். இப்பொழுது சரிதானு? பிராணநாதா, பெயரிலென்ன இருக்கிறது? அன்றியும் வனஜா யென்னும் பதத்திற்கு வனத்திலுதித்தவள் என்றுதானே அர்த்தம்? கிரி வனத்திலிருக்கிறது. ஆகவே கிரியிலுதித்தது வனத்திலுதித்ததாகாமற் போகாது.

ம. ஐயோ! கிரிஜா! கிரிஜா! நீ இவ்வளவு கூறவேண்டுமா? ஐயோ! என் மன நிலைமை உனக்குச் சற்றும் தெரியவில்லையே. கிரிஜா! உன்னைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் எனது பிதாவின் கட்டளை எனக்கு ஞாபகம் வருகிறது. அப்பொழுது நான் படும் வேதனை ஈசனுக்கே தெரியும். — ஐயோ! நான் உன்னையன்றி வேருெரு பெண்ணை விவாகம் செய்துகொள்வேனே?—ஆயினும் —அதோ வருகிருர்! அதோ வருகிருர்! ஐயோ! தந்தையே! தந்தையே! உமது கட்டளைப்படியே நடக்கிறேன்! நடக்கிறேன்! என்மீது கோபித்துக் கொள்ளாதீர்!

ஐயோ! அப்படியே பிரமாணம் செய்கிறேன்! பிரமாணம் செய்கிறேன்!

கி. ஐயோ! இதென்ன இவருக்கிப்படி மதிகலங்கியிருக்கிறதே. ஈசனே! நான் என்ன செய்வேன்?

ம. கிரிஜா, கேட்டனையா இப்பொழுது நான் கூறியதை. இனி அதினின்றும் ஒருகாலும் தவறேன்.

கி. பிராணநாதா! ஐயோ! இதற்கு நான் என்ன செய்வது? ஏதோ உமக்கு உடம்பு அசௌக்கியமா யிருக்கிறாற்போ லிருக்கிறது. இதென்ன சித்தப் பிரமை? இங்கொரு வரும் வரவில்லையே! வாரும் இவ்விடத்தை விட்டுப் போவோம்—

ம. கிரிஜா! என்னைத் தீண்டாதே! என்னருகில் வாராதே. ஐயோ! உன்னை நான் ஒருமுறை தீண்டுவேனாயின் என் தீர்மானமெல்லாம் போம்.—ஐயோ! கிரிஜா, நீ உத்தம குலத்திலுதித்த பெண்ணானால்—என்மீது காதல்கொண் டிருப்பது உண்மையானால்—என்னை இந்த யமவாதனையி னின்றும் கரையேற்று! ஐயோ! உன்னை வேண்டிக்கொள் ளுகிறேன்.

கி. என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்?

ம. என்னெதிரில் நில்லாதே போ!—என்னை மறந்துவிடு. என்னை மன்னித்துவிடு!

கி. உம்மை மன்னித்தேன். உம்மெதிரிலும் நிற்கவில்லை. ஆயினும் உம்மை மறப்பதெப்படி? அது அசாத்தியம் என்னுயிருள்ளளவும்.

ம. ஐயோ! உன்னை வேண்டிக்கொள்ளுகிறேனே வேண்டிக் கொள்ளுகிறேனே! உனது காதலின்மீதாணை—ஐயோ உன்னை நான் தீண்டலாகாது தீண்டலாகாது! ஒருமுறை தீண்டுவேனாயின்—ஐயோ! ஐயோ!—

கி. பிராணநாதா! என் பொருட்டு ஏன் வருந்துகிறீர்! இதோ—அப்படியே உமது கட்டளைப்படி ஆகட்டும். இதோ உமது மோதிரம்—என்னை வெறுத்தவர் இதனை யும் பெற்றுக்கொள்ளும். இது என் விரலிலிருக்குமள

வும் உம்மை மறக்க முயலுதலும் அசாத்தியம்—இதோ வாங்கிக்கொள்ளும்—

ம. ஆம் ஆம், கொடு இப்படி.

கி. ஐயோ ! இதைக் கழற்ற முடியவில்லையே என்றால். சற்று கழற்றும்—அப்பா !—

ம. கொடு இப்படி சிக்கிரம்.

[மோதிரத்தைக் கழற்றப் பார்க்கிறான்.]

கி. பிராணநாதா ! இப்பொழுதெப்படி தீண்டினீர் என்னை ? —பிராணநாதா ! இதைக் கழற்றவும் உமக்கு மனம் வந்ததே ! இம் மோதிரத்தைக் கையிலிடும்பொழுது நீர் என்ன கூறினீர் என்பதை மறந்தீரோ ? என்னைவிட்டுப் பிரிவதில்லை என்று பிரமாணம் செய்து கொடுக்கும்படி நான் கேட்டபொழுது, என் பிதாவின்மீ தாணைப்படி உன்னை எக்காலமும் பிரிவதில்லை, என்று பிரமாணம் செய்து கொடுத்தீரே ! இப்பொழுது என்னைப் பிரியக் காலம் வந்ததோ ? உமது பிதாவின்மீ தாணையிட்டதையும் தவறக் காலம் வாய்த்ததோ ? பிராணநாதா, உமது பிதாவின்மீ தாணையிட்டபடி நடவும்—அதுதான் நான் வேண்டிக்கொள்வது.

ம. ஆம் ஆம் உண்மையே. ஐயோ ! அதற்குக் குறுக்காக நடப்பேனோ ? ஆயினும் நான் என்ன செய்வது இந்த தர்ம சங்கடத்திற்கு ?

கி. வாரும் சொல்லுகிறேன்—உடனே உமது குலதெய்வத்தின் கோயிலுக்குப் போவோம். அங்கு எனக்கு மணமாலை சூட்டும்—பிறகு சொல்லுகிறேன்.

[கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போகிறாள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம்

முதல் காட்சி

இடம்—அரண்மனையிலோர் அறை.

வனஜா வருகிறாள்.

வ. நான் நினைத்த வண்ணமே முடிந்தது! அவராவது என் மீது காதல் கொள்வதாவது! அவருடைய மனம் திடீரென்று மாறியவுடன், ஏதோ இதில் சந்தேகம் தட்டியதெனக்கு. பிதாதான் மதிமோசம் போனார்; இளவரசர் கிரிஜாவின் மீது கொண்டிருக்கும் காதலின் திறத்தையறிந்த நான், என் மீதவர்காதல் கொள்வார் என்னும் எண்ணத்தை எப்படிக் கொண்டேன் என்று எனக்கே ஆச்சரியமா யிருக்கிறது. என்ன புத்திஹீனம்! நான் அவர்மீது கொண்டகாதலே, இவ்வாறு என் மதியை மயங்கச்செய்தது! உண்மையை ஒளிப்பானேன்? எப்படியாவது நம்மை மணம் புரிந்தாற் போதுமென்று எண்ணியிருந்த நான், இளவரசர் புத்தி விகற்பத்தால், அன்றைத்தினம் அவ்வாறு என்னிடம் கூறவே, யோசியாது நம்பிவிட்டேன். இனி என்ன செய்வது? ஐயோ! அவர் முதலிலிருந்தபடியே இருந்தபோதிலும் என் மனத்தை ஒருவாறு திருப்பிக்கொண்டிருப்பேன். எனக்குக்கிட்டும் இப்பேரின்பம், என்னும் ஆசை யுண்டாகவே, எனக்கவர் மீதிருந்த காதல் பதின்மடங்கு அதிகமாய் விட்டதே! இனி இதனை அடக்க வென்னாலாகவில்லை; ஐயோ! இதற்கு நான் என் செய்வது? இத்துயரை நான் எப்படி சகிப்பேன்? ஆயினும் வேறு வழியில்லை. கடைசிமுறை கேட்டுப்பார்ப்போம். இப்பொழுதும், தான் கிரிஜாவின்மீதே காதல்கொண்டிருப்பதாக அவர் கூறுவாரானால் நான் அவரை நிந்திப்பதிற் பயனென்ன? என்மீது கிஞ்சித்தேனும் காதலில்லாதிருக்கும்பொழுது, அவர் என்னை மணந்துதான் நான் என்ன சுகமனுபவிக்கப்போகிறேன்?

ஒன்றுமில்லை. என்னை யொத்த உத்தம ஸ்திரீகளுடைய கடமை என்னவென்றால், தமது காதலர் வேறொரு பெண்ணை விரும்புவாராயின்; அதற்குடன்பட்டு, அவருடைய இன்பத்துக்குக் குறுக்கு சொல்லாது தம் தலைவிதியைப் பொறுத்தலேயாம். இந்தப்படி நடக்கலாமென்றாலோ, இதற்குப் பிதா உடன்படுவதாகக் காணோம். அவர் நான் எப்படியாவது ராஜகுமாரரை விவாகம்புரிய வேண்டுமென்று மன்றாடுகிறார். இந்த தர்ம சங்கடத்திற்கு நான் என்ன செய்வது? என் கடமைப்படி நான் நடப்பதா? அல்லது என் பிதாவின் கட்டளைப்படி நடப்பதா? ஐயோ! எனக்கின்னது செய்வதென்று தோற்றவில்லை—

விநயேந்திரன் வருகிறான்.

வி. என்ன, மறுபடியும் யோசிக்க ஆரம்பித்து விட்டாயோ? அதிகமாகயோசனை பண்ணுவதினால் எல்லாக் காரியங்களும் கெட்டுப்போகின்றன. யோசனை யென்ன இன்னும்? ஒரு முறை தீர்மானித்து விட்டபிறகு மறுபடியும் எண்ண மென்ன?

வ ஒன்றுமில்லை, அண்ணா.

வி. வனஜா! நான் சொல்வதைக் கேள். இப்பொழுதாவது குறுக்கே ஒன்றும் சொல்லாதே! ஏன் வீணில் தானாக வரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுகிறாய்? இனியேனும் என் சொற்படி கேட்பாயாயின் நீ காதல் கொண்ட கணவனை மணம் புரியலாம்—

வ. ஆம், அவர் என் மீது காதல் கொண்டிராவிட்டால், அவரை நான் மணம்புரிந்து என்ன பயன்?

வி. பார்த்தாயா! ஆரம்பித்து விட்டாயே! உனக்கொன்றும் தெரியாது ஆடவர் மனத்தைப்பற்றி; பேதையாகிய உனக்கென்ன தெரியும்? உனக்காவது புத்தியிருக்க வேண்டும், அல்லது நான் சொல்வதையாவது கேட்க வேண்டும், இரண்டு மில்லாவிட்டால் நான் என்ன செய்வது?

வ. அண்ணா ! அண்ணா ! வீணில் என் மீது கோபங் கொள்ளாதீர் ; நான் சொல்வதைச் சற்று கேளும். பிறகு எது நியாயமென்று உமக்குத் தோன்றுகிறதோ, அதன்படி கட்டளையிடும், அதன்படியே நடக்கிறேன். இப்பொழுதோ, மறுபடியும் இளவரசர் மனம் திரும்பி கிரிஜாவின்மீது முன் பிருந்ததைவிட பதின்மடங்கு அதிகமாகக் காதல் கொண்டிருக்கிறார் என்பது, நீர் அறியாத விஷயமன்று, அப்படியிருக்க எனக் கவர்மீதுள்ள காதல் குன்றுவிட்டாலும், என்மீ திச்சையில்லாப் புருஷனை நான் மணந்து என்ன சுகமனுபவிப்பது ? அவரை வீணில் நிர்ப்பந்திப்பதிற் பயனென்ன ? அவருக்கும் மனவருத்தம், எனக்கும் சுகமில்லை—வீணில் கிரிஜாவும் மனஸ்தாபப்படுவாள்—ஆகவே என்கதி எப்படியாவது போகட்டும்—அவர்களிருவரும் சுகமாயிருந்தாற் போதுமெனக்கு. இதுவே உத்தம குலத்துதித்த என்போலியர்க்கழகு—என்ன சொல்லுகிறீர் ?

வி. உம்.—நீ சொல்ல வேண்டிய தெல்லாம் முடிந்ததா இன்னும் ஏதாவதிருக்கிறதா ?

வ. அண்ணா, பிடிவாதமாய்ப் பேசாதீர், நியாயப்படியும் சத்திய மார்க்கமாயும் கூறும்.

வி. வனஜா ! என்ன அதிகப்பிரசங்கியா யிருக்கிறாய் ? நீ பெண்ணென்பதை மறந்தனையோ ? எனக்கே புத்தி சொல்ல வருகிறாயோ ?—நேரமாய்விட்டது. உனக்கு நியாயங்களெல்லாம் எடுத்துக் கூறக் காலமில்லை. நான் சொல்வதைக் கவனமாய்க்கேள். நீ என் பெண்ணென்பது உண்மையானால் என் சொற்படி நடப்பாய்—இல்லாவிடின்—உன்னிஷ்டம். பேசாதே !—நீ இந்த மதனமோஹனனைத்தான் மணம் புரியவேண்டும். அன்றைத் தினம் உன்னிடம் உன்னை விவாகம் புரிவதாகக் கூறிவிட்டு, பிறகு அவன் பின்வாங்குவதாவது ! அவனுக்கவ்வளவு கர்வமா ? ஆணவமா ? இருக்கட்டும்—இப்பொழுது அவன் இங்குவந்து உன்னை வேண்டப்போகிறான், உனக்

குச் செய்த வாக்குத்தத்தத்தினின்றும் அவனை விட்டு விடும்படி, நீ அப்பொழுது அதற்கேதோ உடன்பட்டவள் போல் பேசி, முடிவில், எனக்கொன்று மில்லை, நீர் உமது பிதாவுக்குச் செய்திருக்கும் பிரமாணம் எப்படிப்போவது, அதற்கே வருத்தப்படுகிறேன், என்று சொல். உடனே ஜெயகேதுவைப்போல் வேடம்பூண்டு இங்கு மறைந்திருக்கும் நான் வெளிப்பட்டு அவனை பயமுறுத்துவேன். நீ என்னைத் திரும்பியும் பார்க்கவேண்டாம். நான் இன்னானென்று எவ்விதத்திலும் வெளிப்படுத்தாதே. பிறகு நிமிஷத்தில் அவன் நமது வழிக்கு வந்துவிடுவான். பிறகு, உடனே உன்னைத் தனது குலதெய்வத்தின் கோயிலுக்கழைத்துச்சென்று மணமாலை சூட்டச்சொல்.—ஒருமுறை மணந்தபின் உன்னை விட்டுப் பிரியான்—பிறகு நடக்க வேண்டியதைப் பார்த்துக்கொள்ளுவோம்.

வ. அண்ணா ! இது நியாயமா ? ஐயோ ! இது நியாயமா ?—

வி. உனக்கு மிகவும் நியாயம் தெரியும் ! பேசாதே ! என் பெண்ணென்பது உண்மையானால் என் சொற்படி நடப்பாய். இதோ மதனன் வரும் நேரமாயது, ஜாக்கிரதை, இனி யோசித்துப் பயனில்லை. என் சொற்படி நடக்க வேண்டியதுதான்.

[விரைந்து போகிறான்.]

வ. ஐயோ ! இதென்ன சங்கடமாய் முடிந்ததே ! நான் இத்தீய தொழிலுக் குடன்படவோ ? இல்லாவிட்டால், தந்தைக்குக் கோபம் வரும். அவருக்குக் கோபம் வந்தால், இன்னது செய்வார் இன்னது செய்யமாட்டார் என்றில்லை. ஐயோ ! நான் என் செய்வேன் ?—

மதனமோஹனன் வருகிறான்.

வாரும்—ராஜகுமாரா,—

ம. வனஜா,—நான் எதைப்பற்றி உன்னிடம் பேச வந்திருக்கிறேன் தெரியுமா உனக்கு ?

வ. என்ன விசேஷம் ?

ம. ஐயோ! நான் எப்படி ஆரம்பிப்பது என்று எனக்குத் தெரியவில்லையே!—

வ. எங்கே இரண்டு மூன்று தினங்களாக இந்தப்புறம் அரண்மனையை எட்டிப் பார்க்கவே யில்லை?

ம. எப்படியும் சொல்லித்தான் தீரவேண்டும்!—பெண்ணே,—நான் அன்றைத்தினம் உன்னை விவாகஞ் செய்துகொள்வதாகக் கூறியபொழுது ஏதோ யோசியாது கூறிவிட்டேன். நீயோ உத்தம குலத்திலுதித்த பெண். ஆதலால், நான் செய்த பிழையைப் பொறுப்பாய் என்று உறுதியாய் நம்பி இங்கு வந்தேனின்று. நான் கிரிஜாவின் மீது நெடுநாளாகக் காதல்கொண்டிருப்பது நீ அறியாத விஷயமன்று—ஆகவே—ஐயோ! நான் எப்படி வாயைத் திறந்து சொல்வது—ஈசனே! ஈசனே!—

வ. ராஜகுமாரா, வருத்தப்படாதீர். உமது வேலையை நான் சுலபமாக்குகிறேன். ஆகவே அந்த கிரிஜாவையே மணம் புரிய உத்தரவளிக்க வேண்டுமென்று கேட்க வந்தீரோ? நீர் கேளாததன் முன்னரே நான் உமக்கு உத்திரவளித்தேன். என்மீதுமக்குக் காதலில்லாதிருக்கும் பட்சத்தில் தாம் என்னை மணந்தென்ன பயன்?—ஆயினும்—தாம் தம்முடைய பிதாவின் கட்டளைப்படி நடக்கவேண்டுமே, அதினின்றும் தவறுதல் நியாயமோ என்று மாத்திரம் சற்று யோசிக்கலானேன்—உம்முடைய பிதாவோ என்னையன்றி—

ஒருபுறமாக திடீரென்று ஜெயகேதுவின் உடையுடன்
விநயேந்திரன் தோற்றுகிறான்.

ம. ஆ!

வி. அடே!—மதனமோஹனா!—என்னுடைய கட்டளையை மீறப்பார்க்கிறாயா நீ!—அப்படியா சமாசாரம்!

ம. ஐயனே! ஐயனே!—

வி. என் மைந்தன் என்பதை மறந்தனையோ?—நீ என் குமாரன் என்பது மெய்யானால்—என் கட்டளைப்படி இந்த வனஜாவை மணம் புரிவாய்! பிறகு உன்னிஷ்டம்!

ம. ஐயோ! ஆகட்டும் ஆகட்டும்! அப்படியே ஆகட்டும்!

வி. பிரமாணம் செய் ஆனால்!

ம. அப்படியே செய்கிறேன்!—செய்கிறேன்!

வி. ஞாபக மிருக்கட்டும், மறவாதே!—இனி மறுபடியும் உன் வார்த்தையை மாற்ருதே! தெரியுமா? மாற்றுவாயாயின் உனக்குக் கெடுதி சம்பவிக்கும்—

ம. இல்லை இல்லை இல்லை!—

வி. சரிதான் ஞாபகமிருக்கட்டும்—மறவாதே!

[விநயேந்திரன் மறைகிருன்.]

ம. சரி!—என் விதி தீர்ந்தது—யோசிப்பதாவது? வனஜா! உன்னையே நான் விவாகம் செய்துகொள்ளுகிறேன்.—ஒரு க்ஷணமும் தாமதிக்கலாகாது—உன் தந்தையெங்கே?—

வ. ராஜகுமாரா, நீர் ஏதாவது அவசரப்பட்டு—

ம. [அவள் கரத்தைப் பற்றி] இல்லை இல்லை! உன்னையே மணம் புரிகிறேன். இது சத்தியம்!

வ. ஆனால் வாரும் போவோம். உமது குலதெய்வத்தின் கோயிலுக்கு உடனே. [அவனது கரத்தைப்பற்றி அழைத்துக்கொண்டு போகிருள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்—அரண்மனையின் பின்புறமாயுள்ள திட்டி வாசல்.
மணமாலை பூண்டு மதனமோஹனனும் வனஜாவும் வருகிருர்கள்.

வ. பிராணநாதா, இனி என்ன நேர்ந்தபோதிலும்—என்னை விட்டு ஒருகாலும் பிரியமாட்டீரே?

ம. இல்லை இல்லை.

வ. பிரமாணம் செய்துகொடும்.

ம. அப்படியே.

[கையடித்துக் கொடுக்கிருன்; வனஜா அவனுக்கு முத்தமிடுகிருள்.]

கிரிஜா திடீரென்று வருகிருள்.

கி. ஆ! பிராணநாதா! என்ன மோசம் செய்தீர்! இக்கோலத்தைக் கண்டபின் நான் இனி உயிர் வாழ்வானேன்?

[மூர்ச்சையாகிருள்.]

ம. கிரிஜா! கிரிஜா! கிரிஜா! இறந்தாள் என் காதலி! கொன்றேன் நான் அவளை! ஐயோ!—பாவி! சண்டாளி! என் கிரிஜாவைக் கொன்ருயே நீ! எனக்கென்று யமனுக உதித்தாயோ இப்புவியில்! நீ ஏனே பிறந்தாய்ப் பெண்ணுக? இதோ—என் காதலியைத்தான் கொன்ருயே—என்னையும் கொன்றுவிடு!

[தன் கட்கத்தை நீட்டுகிருன்]

வ. இப்படி நடக்குமென்று அப்பொழுதே நினைத்தேன்—பிராணநாதா! என்மீது தவறுதான்—ஆயினும் என்னை வெறுக்காதீர். என்மீதொரு குற்றமுமில்லை. நான் உயிருட னிருப்பது உமக்குக் கஷ்டமா யிருக்கிறது. ஆனல் அதினின்றும் சீக்கிரம் உம்மை நிவர்த்திக்கிறேன். நான் உம்மீது காதல் கொண்டதற்காக அவ்வளவாவது செய்யாமற் போவேனே? நான் வருகிறேன்.

[விரைந்து போகிருள்.]

ம. வனஜா!—கிரிஜா!—கிரிஜா! வனஜா!—என் தலை சுழல்கிறது—இதோ உயிரிருக்கிறது உயிரிருக்கிறது!—கிரிஜா! கிரிஜா!

கி. [மூர்ச்சை தெளிந்தெழுந்து ஒருபுறமாக நின்று] நான் கனவு கண்டேனு? இல்லை! இல்லை!—தூரத்தில் நில்லும் என்னைத் தொடாதீர்! உமது தங்கைமீ தாணை யிட்டுவிட்டேன்!

ம. என்ன இது கிரிஜா?

கி. ராஜகுமாரா, இனி தாம் என்னைப் பெயரிட்டழைக்க வேண்டாம். அந்த சுதந்திரம் இனி உமக்குக் கிடையாது—வேருெருத்திக்கு மணமாலை சூட்டியபின்—

ம. அப்புறம்?—

கி. ஒன்றுமில்லை. இந்த உண்மையை அப்பொழுதே அறியாமற் போனேனே! அறிந்திருப்பேனுயின் உமக்கிவ்வளவு

கஷ்டம் கொடுத்திருக்கமாட்டேன். அம்மட்டும் இப்பொழுதாவது கண்டேனே, ராஜகுமாரா எல்லா உண்மையையும் அறிந்து கொண்டேன். உமது வாக்கின் திறத்தையும் கண்டேன். இதுவரையில் தமக்கு நான் சிரமம் கொடுத்ததை மன்னிக்கவேண்டும். நான் கண்ணாரப் பார்க்கவேண்டியதையும் பார்த்தாயது, காதாரக் கேட்க வேண்டியதையும் கேட்டாயது, இனி வாயாரக் கூற வேண்டியதைத்தான் கூறவேண்டும்—

ம. ஐயோ ! கொஞ்சம் பொறு ! நான் சொல்வதைக் கேள்.— ஏன் எனக்குப்பேச நா எழவில்லை ?—கொஞ்சம் பொறு !—

கி. இதுவரையில் பொறுத்தது போதும். நான் ஏன் தாமதிக்கிறேன் ?—ராஜகுமாரா ! இன்றே தமது குணத்தின் பெருமையை யறிந்தேன். இதுவரையில் அறியாமலிருந்தது என் பிழைதான், என்றால் தமக்கேன் கஷ்டம் ? தாம் சற்று முன்பாக யாரை மணந்தீரோ, யாரை விட்டுப் பிரிவதில்லையென்று சத்தியம் செய்தீரோ, அவளுடன் சுகமாய் வாழும். நான் உயிருடன் இருப்பது உமக்குக் கஷ்டமாயிருக்கும். அக்கஷ்டத்தி னின்றும் இதோ நீக்கிவிடுகிறேன்.—

ம. ஐயோ !—அவசரப்படாதே !—அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிடாதே !—நான் சொல்வதைக் கேள்—கேள் சற்று—உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன்.

கி. எல்லாம் கேட்டாயதே, இன்னும் என்ன கேட்பது ?

ம. ஐயோ !—அவசரப்பட்டு ஒன்றும் செய்யாதே !—நான் சொல்வதை மாத்திரம், கொஞ்சம் தயைசெய்து கேட்பாயாயின், என்னை மன்னிப்பாய்—நான்—

கி. மன்னிப்பதாவது !—என் மன்னிப்பு தமக்கென்னத்திற்கு ! என்னையன்றி வேறொரு பெண்ணையும் தீண்டுவதில்லையென்று அன்றைத்தினம் உமது குலதெய்வத்தின் கோயிலெதிரில் பிரமாணம் செய்தீரே, அத்தேவதையின் மன்னிப்பைக் கேளும் !—நான் விடை பெற்றுக் கொள்

ளுகிறேன்,—இதோ எடுத்துக்கொள்ளும் உமது மோதிரத்தை, இனி இது என் விரலி லிருக்கவேண்டிய நிமித்திய மில்லே.—என்னே இக்கோலம் கண்டதற்காக சுவாமி உம்மை மன்னிப்பாராக!

[மோதிரத்தை அவன் எதிரில் எறிந்துவிட்டு விரைந்து போகிருள்.]

ம. நான் கனவு காண்கிறேனு? இல்லேயே! இல்லேயே!—கிரிஜாவல்லவா இங்கு நின்றது?—ஆம் ஆம் ஆம்!—கிரிஜா! என்னே மன்னிப்பாய்—நான் ஒரு குற்றமும்—என்ன ஒருவரையும் காணும்!—என்ன சமாசாரம்? என் தலேயில் யார் கல்லேவைத்தது?—எனக்குப் பயித்தியமா பிடித்திருக்கிறது? சீ சீ! இல்லே!—என்ன சொன்னுள்?—சீ!—என் மனத்தை இப்படி இருக்கவிடலாகாது — இல்லாவிட்டால் — என்ன சொன்னுள்?—சுவாமி மன்னிப்பாராக!—ஏன்? சுவாமி மன்னிக்க மாட்டாரா?—நான் மன்னித்தேன்—இக்கோலங் கண்டதற்காக!—யார் கண்டது?—உமக்கேன் கஷ்டம்? நீக்கிவிடுகிறேன்!—சுகமாய் மணம்புரியும்—யாரை?—யாரை?—வனஜாவை!—ஐயனே!—செய்கிறேன் செய்கிறேன்—செய்கிறேன்!—மன்னியும்!—மன்னியும்!—

[கீழே மூர்ச்சித்து விழுகிருன்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி.

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

கிரிஜாவும், தர்மபாலனும் வருகிருர்கள்.

த. அம்மணி! அம்மணி! வருந்தாதீர்! வருந்தாதீர்! எப்படியும் நமது சேவகர்கள் கண்டு பிடித்து வருவார்கள். நமது புராண பயித்தியம் ஒன்று அரண்மனையி லிருந்ததே, அதனுடன் மேற்கு வாயில்வழியாகச் சென்றதாகச் சிலர் கூறினுர்கள். நான் சேவகர்களே அனுப்பியிருக்

கிறேன், எப்படியாவது கண்டுபிடித்து அழைத்து வர வேண்டுமென்று.

கி. ஐயா! ஐயா! தாமும் போய்த் தேடும் தேடும்! உடனே புறப்படும்.

த. தாம் தற்கொலைபுரிய முயலுவதில்லை என்று பிரமாணம் செய்து கொடுத்தால் போகிறேன். இல்லாவிட்டால் போகமாட்டேன்.

கி. இல்லை இல்லை, போம். எப்படியாவது என் பிராண நாதரைக் கண்டுபிடித்து வாரும் போம். ஐயோ! இந் நிருபம் என் பிராணநாதரிடம் முன்பே அகப்பட்டிருக்க லாகாதா?

த. அம்மணி வருந்தாதீர்! நாம் என்ன செய்யலாம்? எல்லாம் அந்த விநயேந்திரர் செய்த சூது. அச்சூதுக்குத் தக்க தண்டனையே சுவாமி விதித்தார். அவர் பெண்ணு மிறக்க, தானு மிறக்க நேர்ந்தது—

கி. ஐயோ பாபம்! வனஜா ஒன்றுமறியாப் பேதை. அவளும் இறக்கும்படி நேர்ந்ததே! அதிருக்கட்டும். ஐயா, நீர் போம் போம். நான்தான் பிரமாணம் செய்து கொடுத் தேனே!—

[தர்மபாலன் போகிறான்.]

கி. ஐயோ! நான் என்ன தப்பிதம் செய்தேன் இப்படி யாகுமென்று கனவிலும் நினைக்கவில்லையே! ஐயோ! நான் கொஞ்சம் பொறுத்திருக்கலாகாதா அவர் வேண் டிக்கொண்டபடி? ஈசனே! ஈசனே! என் கணவனை எப்படியாவது சீக்கிரம் என்னுடன் சேர்ப்பாயாக!

[போகிறாள்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் அங்கம்

முதற் காட்சி

இடம்—ஒரு குக்கிராமம்.

ஒருபுறமாக சங்கிலியால் கட்டப்பட்டு மதனமோஹனன் உறங்குகிறான்.

மற்றொருபுறமாக வனஜா ஜோகி யுடையில் வருகிறாள்.

வ. அம்மட்டும் நாமிவ்வாறு மாறுவேடம் பூண்டது நலமாயிற்று. இதுவரையில் என்னை ஒருவரும் கண்டு பிடித்திலர்; இதுவும் நம்முடைய அதிர்ஷ்டம்தான்—அதிருக்கட்டும். இந்த இரண்டு வருடங்களாக ஊணுறக்கமின்றி நகரம் நகரமாய்த் திரிந்தலைந்தும் என் பிராணநாதர் என் கண்ணுக்கு அகப்படவில்லையே! ஒரு வேளை—ஐயோ! அதை நினைத்தாலும் என் மனம் சுழல்கிறதே! ஈசனே! ஜகதீசா! ஆபத்பாந்தவா! அனாதரட்சகா! நீதான் என்னுருயிர் நாதனுக்குத் துணையாய், அவருக்கு ஒரு கெடுதியும் சம்பவிக்காதபடி காப்பாற்றியருள வேண்டும். பேதையாகிய என்னா லென்னவாகும்? ஐயனே! உமது சரணையே கடைப்பிடியாகப் பற்றினேன். தாமும் என்னைக் கைவிட்டால் என்கதி என்னவாவது? அடியாள் என்பிதா இறந்ததையும் கருதாது, ராஜபோகத்தையும் கருதாது, என் பிராணநாதனே முதலென வெண்ணி, மாறுவேடம் பூண்டு என் பிராணநாதரைத் தேடி, இவ்விரண்டு வருடங்களாக உழல லாயினேன். இது தமது சித்தமறியாத தன்று! ஈசனே! நீரே துணை! நீரே துணை!—இதிருக்கட்டும் இந்த குக்கிராமத்திற்றான் யாரோ சில கூத்தாடிகளுடன் ஒரு பயித்தியக்காரனும் வந்திருப்பதாகக் கூறினார்கள். அடையாளத்தைக் கேட்கும் பொழுது என் பிராணநாதர்போலத் தோற்றுகிறதென்மனத்தில்! அப்படியிருக்குமா?— பிராணநாதா!

பிராணநாதா! இப்படியும் இருந்ததே உமது விதி! ராஜர்களெல்லாம் மெச்சும்படியான உன்னத ஸ்திதியி லிருப்பதைவிட்டு, பூர்வ கர்ம வசத்தால் நாடு நகரம் துறந்து, பித்தம் பிடித்து, அலையவேண்டி வந்ததோ? ஐயோ! இக்கொடும் பஞ்சகாலத்தில் தாம் உணவின்றி எங்கலைகிறீரோ? எங்கு களைத்து வீழ்ந்து கிடக்கிறீரோ? கோடி கோடி ஜனங்களுக்கு உணவிட்டுக் காப்பாற்ற வேண்டிய தாமே மற்றவர் பரிதாபத்தால் வசிக்கவேண்டி வந்ததோ?—சீ! நான் என்ன மூடத்தன்மாய் புலம்ப லாயினேன், என் பிராணநாத ரிருக்குமிடம் தேடிக் கண்டு பிடித்தலை விட்டு! இங்கென்ன ஒருவரையும் காணோம். ஒருபுறம் குடிசை யொன்றிருக்கிறது—ஜன சந்தடியைக் காணோம்.—ஆ! அதோ யாரோ படுத் துறங்குகிறாற்போ லிருக்கிறது! இதென்ன இவரைச் சங்கிலியினால் கட்டியிருக்கிறது? யார் இவர்? அருகிற் சென்று பார்ப்போம்—ஆ! பிராணநாதா! பிராணநாதா! ஐயோ! இதென்ன என் பிராணநாதர் இறந்துகிடக்கி றாரா என்ன! அசைவற்றிருக்கிறாரே!—இல்லை இல்லை! இதோ மூச்சுவருகிறதே! ஐயோ! களைத்து மூர்ச்சை யாய்க்கிடக்கிறார்—பிராணநாதா! பிராணநாதா! இப் படியும் விதித்தானோ பிரமனுமக்கு! இக்கோலத்திலும் உம்மைக் காணவேண்டி வந்ததே நான்! ஐயோ! ஐயோ! நான் என் செய்வேன்? என் செய்வேன்? இன்னும் மூர்ச்சை தெளியவில்லையே! பசியினாலும் ஆயாசத்தி னாலும் இவ்வாறிருக்கிறீரோ? ஐயோ! இங்கு நான் எங்கு போவது தண்ணீருக்கு!—அதோ அக் கோயிலுக்காவது போய் பார்க்கிறேன்!

[வெளியே ஓடிப்போய், கொஞ்சம் ஜலம் கொண்டு வந்து அவன் முகத்தில் தெளிக்கிறாள்.]

ம. யார்?—எங்கே அவர்கள்?—நீ யார்? யார்?—நீ நல்ல வன்—

வ. ஐயோ! பிராணநாதா! பிராணநாதா! என்னைத் தெரிய வில்லையா உமக்கு? நான் மாறுவேடம் பூண்டிருக்கி றேனே!—வனஜா!

ம. வனஜா!—ஐஐயோ!—நான் செத்துப்போய் விடுகிறேன் செத்துப்போய்விடுகிறேன்!

வ. ஐயோ! ஐயோ! ஓடாதீர்! ஓடாதீர்! உமக்குத்தான் வீணில் ஆயாசமாகும்! இப்படி உட்காரும் சற்று. [தனக்குள்] அம்மட்டும் இவரைக் கட்டியிருப்பது நமக்கு நலமாயிற்று.—பிராணநாதா, நான் வனஜா, தெரியாவில் லையா உமக்கு?

ம. வனஜாவல்ல—வனஜா சொல்லாதே—நீ நல்லவன்!— சொன்னால் — பயித்தியம் — எனக்கில்லை — உனக்குப் பிடித்துப்போம்—தெரியுமா?

வ. ஐயோ! நான் சொல்லவில்லை, இப்படி உட்காரும்.

ம. உனக்குப் பயித்தியம்!—உனக்கு எத்தனை பெண்சாதி கள்?—இரண்டா?—உன் பெயரென்ன?

வ. வனஜா.

ம. ஐயோ! ஐயோ! இல்லை இல்லை! நான் செத்துப்போய்விடு கிறேன், செத்துப்போய் விடுகிறேன்!

வ. ஐயோ! நான் சொல்லவில்லை வாரும், வாய் தவறிச் சொல்லி விட்டேன்.

ம. ஆ! சரி! வனஜா அவள்!—நீ அவள்—வன் வன்—வள் வள்!

வ. ஆம், நான் வனஜா அல்ல.

ம. ஆ!—நீ—நீ—யார்?

வ. எந்தப் பெயராவது வையும்—உட்காரும் இப்படி.

ம. நீ—உன் பெயர்—நல்லவன்.

வ. ஆம் நல்லவன் தான் என்பெயர்.

ம. வேறு பெயர் சொல்லாதே — சொல்லாதே!— சொல் லாதே!—

வ. இல்லை இல்லை!

ம. நீ—நல்லவள் ! நல்லவள் !—எனக்குத் தூக்கம் வருகிறது.
[அப்படியே உறங்குகிறான்]

வ. ஐயோ ! பிராணநாதா ! இப்படியும் உமது புத்தி மாற வேண்டுமா? வனஜா வென்கிற பெயரைக் கேட்டாலும் உமக்குப் பித்தம் அதிகரிக்க வேண்டுமா ? என் பாபமா அது ? ஆயினும் என் முகத்தைப் பார்க்கும்பொழுது உமக்கு வெறுப்புண்டாகாதது என் பாக்கியமே ! உறங்கும் ; நாதா ! இனி உம்மைவிட்டு ஒரு க்ஷணமேனும் பிரியேன். இக்கூத்தாடிகளுடன் நானும் சேர்ந்து, உம்மைக் காப்பதே என் முதல் கடனாகக்கொண்டு, காப்பாற்றி வருகிறேன். [பெருமூச்சு விட்டு]
சுவாமி யிருக்கிறார் ! எப்படியும் உம்மை இவ்வியாதியினின்றும் நீக்குகிறேன்—அதென்ன, கோஷ்டம்? ஓஹோ ! இந்தக் கூத்தாடிகள் திரும்பி வருகிறாற்போ லிருக்கிறது—

தெருக் கூத்தாடிகள் குடித்துவிட்டு, தள்ளாடிக்கொண்டு வருகிறார்கள்.

மு-கூ. அடே ! இது யாருடா இது ? நம்ப பயித்தியம் கிட்ட உக்காந்துகினு இருக்கிறது ?

வ. ஐயா, நான் இந்த—ஆளுடைய பந்து. இவரை இரண்டு வருஷமாகத் தேடி அலைந்து இப்பொழுதுதான் உங்களுடன் இருப்பதாகக் கேள்விப்பட்டு, இங்கு வந்தேன். —எனக்குக் கொஞ்சம் பாடத்தெரியும். என்னையும் உங்களுடன் சேர்த்துக்கொண்டால், புண்ணிய முண்டு. எனக் கிப் பஞ்சகாலத்தில் வேறு ஜீவனமே கிடைக்கவில்லை.

இ-கூ. எதோ பாடு, பார்ப்போம் கொஞ்சம்.

வ. அப்படியே.

[ஒரு பாட்டைப் பாடுகிறாள்.]

மு-கூ. பலே ! பலே ! சவாசு ! அடே, ஆளும் ஜோக்காயிருக்கரே —எங்களோடே வந்துடு, சாப்பாடு போடரோம்.

வ. மிகவும் சந்தோஷம், ஆனால் ஒரே வேண்டுகோள் ; நான் எந்நேரமும் இந்த ஆளுடனேயே இருப்பேன். சம்மதம் தானா ?

இ-கூ. இரு இரு ! நம்ப பயித்தியத்தெ பாத்துகிரத்துக்கு நம்பளுக்கு ஒரு ஆளும் வோணும்.

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

கிரிஜா தன் குழந்தை ஜெயந்தனுடன் வருகிருள்.

கி. கண்ணே ! ஜெயந்தா ! இதுவோ உன்விதி ? இச்சிறுவயதில் மற்றப் பிள்ளைகளைப்போல் உனது தந்தை உன்னை எடுத்துச் சீராட்டக் கொடுத்து வைக்காமற் போனயே ! ஈசன் அருள் இப்படியாயிற்று. எப்பொழுதுதான் அவர் உன்னை உன் தந்தையுடனும், என்னை என் புருஷனுடனும், சேர்த்து வைப்பாரோ ?—

தர்மபாலன் வருகிருன்.

மந்திரி, இன்றைக்கேதாவது சேதி வந்ததா ?

த. அம்மணி, இன்றைக்கும் ஒரு சேதியும் வரவில்லை. ஆயினும்.—

கி. இனி என் பிராணநாதரை உயிருடன் காண்பேன் என்னும் ஆசையை விட்டுவிட்டேன் !

த. அம்மணி வருந்தாதீர் ! இன்னும் தாம் தைரியத்தைக் கைவிடக் காலம் வரவில்லை. எப்படியும் அவரை நீர் சீக்கிரம் காண்பீர் என்று எனக்குள் ஏதோ ஒன்று கூறுகிறது.—அம்மணி, இன்றைத்தினம் காலை ஒரு மஹா ஜோஸ்யர் சபைக்கு வந்திருந்தார். அவரை நமது மஹாராஜாவைப்பற்றிக் கேட்டபொழுது, அவர் இங்கு சீக்கிரம் நேர்படுவாரென்றும், ஏதோ அவருக்குப் பித்தம் பிடித்திருக்கிறதென்றும், அது எந்த க்ஷணம் அவர் தன் குமாரனைக்கண்டு அங்கிகரித்து அடையாளம் கண்டுபிடிக்கி

ருரோ, அந்த க்ஷணம் தீருமென்றும், ஜோஸ்யம் பார்த்துச் சொன்னுர். இது உண்மையாகவே யிருக்க வேண்டுமென்று நம்புகிறேன். அவரைப் பார்த்தால் யாரோ ஒரு பெரிய மஹான்போலத் தோற்றுகிருர். மஹாராஜாவுக்கு இக்கெடுதிகளெல்லாம் சம்பவித்தது, பூர்வ கர்ம வசமென்கிருர்; பூர்வ ஜன்மத்தில் ஓர் மஹரிஷியைப் பயித்தியக்காரன் என்று ஏளனம் செய்ய, அவரிட்ட சாபம் இந்த ஜன்மத்தில் நமதரசரைத் தொடர்ந்ததாகக் கூறுகிருர். அச்சாபம் நிவர்த்தியாகும் காலமும் கிட்டியதாகச் சொல்கிருர்—

தண்டாயுதன் வருகிருன்.

இதோ வந்தான் தண்டாயுதன்! தண்டாயுதா, என்ன சமாசாரம்? கண்டுபிடித்தாயா?

தண். ஐயனே! கண்டுபிடித்து விட்டேன் என்று நினைக்கிறேன். க்ஷாம காலத்தின்பொருட்டு நமது ஊட்டறையில் சாப்பிட வந்தவர்களில் இன்றைத்தினம் பாடகர்கள் கூட்டமொன்று வந்திருக்கிறது. அவர்களில் ஒருவர் நமது அரசர்போல் தோற்றுகிருர்—ஆனல் புத்திமாறியிருக்கிறது. உருவம் மிகவும் மாறியிருக்கிறது. தாம் நேரில் பார்த்தால் தெரியும்—

கி. மந்திரி! அவர்களை யெல்லாம் உடனே இப்படி அழைத்து வரச்சொல்லும். நான் பார்க்கவேண்டும். நான் உடனே பார்க்கவேண்டும்.—

தண். இதோ அழைத்து வருகிறேன்.

[போகிருன்; தர்மபாலனும் போகிருன்.]

கி. கண்ணே! ஜெயந்தா! உன் தந்தையா யிருக்குமாக! இதோ என் இடது தோள் துடிக்கிறதே! சந்தேகமில்லை. அவராகத்தா னிருக்கவேண்டும்.—அப் பெரியவர் கூறியதெல்லாம் உண்மையா யிருக்குமாக!

தர்மபாலன் மறுபடி வருகிருன்.

த. அம்மணி, நானும் பார்த்தேன். ஆயினும் எனக்கும் கொஞ்சம் சந்தேகமாயிருக்கிறது. உருவம் மிகவும் மாறி

யிருக்கிறது—இதோ வருகிறார்கள்—சற்று பொறுத் திரும். எல்லாம் விசாரித்துக் கண்டறிவோம்—அவசரப் படாதீர்—

கூத்தாடிகள் வருகிறார்கள்.

அவர்கள் மத்தியில் வனஜா ஜோகியுடையில் மதனமோஹனனைப் பிடித்துக்கொண்டு வருகிறாள்.

த. பாடகர்களே, ராஜமகிஷி உமது பாட்டைக்கேட்க விருப்ப முற்றிருக்கிறார்கள். கொஞ்சம் பாடுங்கள்.—

[அவர்களில் சிலர் பாடுகின்றனர்.]

கி. அதோ நிற்கிறாரே, அவர் யார்? அவர் பாடுவதில்லையா?

மு-கூ. அம்மணி, இதுவா? இது பயித்தியம். ஜனங்களுக்கு வேடிக்கையாகக் கூட பிடித்துக்கொண்டு வந்தோம். ஏதாவது பயித்தியமாகச் சொல்லும், ஜனங்கள் நகைப் பார்கள்—எங்கள் பிழைப்பம்மணி! வேடிக்கை பார்க் கிறீர்களா?

த. ஏதோ பார்ப்போம்—

மு-கூ. சிரோமணி!

ம. ஏன்!

மு-கூ. கொஞ்சம் பாடு.

ம. மாட்டேன்!

மு-கூ. ஏ!—புராணம் சொல்லட்டுமா?

ம. இல்லை இல்லை!—வேண்டாம் வேண்டாம்!

மு-கூ. ஆ!—

கி. அதென்ன? அதென்ன?

மு-கூ. இல்லை அம்மணி! சொன்னதைச் செய்யாவிட்டால் இந் தப் பயித்தியத்தை யடக்க ஒருவழி யுண்டு, புராணம் சொல்லுகிறேன் என்றால், சொன்னபடி ஆடும்.—ஏ! சிரோமணி, நன்றாகப்பாடு ஒரு பாட்டு, நிரம்ப வேடிக் கையா யிருக்கவேண்டும். ராஜ பத்தினி நகைக்கவேண்டும்.

ம. ஓடிப்பூடரேன்!

மு-கூ. ஏ!—புராணம்—

ம. இல்லை ! இல்லை ! பாடுகிறேன் பாடுகிறேன் !

மு-கூ. பாடு ஆனால்.

ம. புராணம் சொல்லாதே ?

கி. ஐயோ ! சந்தேகமில்லை சந்தேகமில்லை ! அவர் குரல்தான் !

த. சற்றுப் பொறும் பொறும் !

மு-கூ. பாடு சீக்கிரம்.

ம. [பாடுகிறான்.]

“ என்முகம் பார்த்தருளையா
ஏழை நானுனதடிமை என்பதும் பொய்யா !
ஓடி நான் பூடரேன் ஓடி நான் பூடரேன் ! ”

மு-கூ. [பாட்டாக] “ புராணம் நான் சொல்ரேன் ! ”

ம. [பாட்டாக] “ ஆனால் போமாட்டேன் ! ”

கி. சந்தேகமில்லை !—பிராணநாதா ! பிராணநாதா !

[தேம்பி அழுகிறாள்.]

த. நீங்களெல்லோரும் உடனே போங்கள் வெளியே ! நில்லாதீர்கள் !—நீர் தவிர.

ம. நானும் பூடரேன் !

த. நீர் போகக்கூடாது.

ம. நல்லவளோடு கூடப்பூடரேன் நானும்.

வ. கூடாது இங்குதானிரும்—இல்லாவிட்டால்—நானும் புராணம் சொல்லுவேன்.

ம. நீ கூடவா ?

வ. ஆம்.

ம. ஆனால்—இங்கேயே இருக்கிறேன்.

வ. இரும். அப்புறம் வந்து அழைத்துக்கொண்டு போகிறேன்.

[போகிறான்.]

கி. ஆ ! யார் அது ? குரல் கேட்ட குரலாயிருக்கிறது ?

த. அம்மணி, மெல்ல பழைய நினைப் பூட்டிப் பார்ப்போம்—மஹாராஜா—அரசே !—நண்பா !—என்னையறியீரா நீர் ?—நான் தர்மபாலன்.

கி. நாதா! நாதா! இதுவோ உமது விதி? என்னையும் உமக்குத் தெரியவில்லையா? நான் உமது கிரிஜாவாயிற்றே!

[மதனமோஹனன் தலையை அசைக்கிருன்.]

த. அம்மணி, இனித் தாம் ஏன் வருந்தவேண்டும்? அந்த மஹான் கூறியது எப்படியும் நிறைவேறும் சீக்கிரம். எப்படியாவ திவருக்குத் தன் மைந்தன் ஞாபகம் வருகிறதா பாரும், நான் ஒரு பக்கமாய்ப் போயிருக்கிறேன்.

[போகிருன்.]

கி. பிராணநாதா! பிராணநாதா!

ஜெ. அம்மா, அழாதீர்;—இது யாரம்மா?

கி. கண்ணே! கண்ணே! இவர்தான் உன் தந்தை! உன் தந்தை; - பிராணநாதா! என்னை உமக்குத் தெரியவில்லையா? என்னை இப்படித் திரும்பிப் பாருமே!—இதோ பாரும் நமக்குப் பிறந்த மைந்தன்? இதோ பாரும் உம்மைப்போலவே யிருக்கிருன்—இவனது முகத்தைச் சற்று பாரும்!

ம. நான் ஓடிப்போகக் கூடாது!—நான் எங்கே இருக்கிறேன்!—இதுயார்—பிள்ளை?—

கி. ஆம் ஆம்! நமது மைந்தன்! நமது மைந்தன்!

ம. ஒன்றும் தெரியவில்லை—யோசிக்கவேண்டும்—தலை பளுவாயிருக்கிறது!—நான் ஓடிப்பூடரேன்!—

கி. ஐயோ! பிராணநாதா! பிராணநாதா! உமக் கென்னைப் பற்றிச் சிறிதும் ஞாபகமில்லையா? இவன் நமது மைந்தனென்று சிறிதும் கண்டுபிடிக்க முடியவில்லையா?—நான் ஒரு நாள் சாயங்காலம், கர்ப்பமாயிருப்பதாகச் சந்தேகப்படுவதாகக் கூறினேனே—இதே அறையிலிருக்கும் பொழுது—ஞாபகமில்லையா?—பிராணநாதா! என்மீது கோபமா? பிராணநாதா! பிராணநாதா! நான் செய்த தெல்லாம் தவறு! தவறு! ஐயோ என்னை மன்னியும்! மன்னியும்!—உம்முடைய கிரிஜா இவ்வளவு வேண்டியும் மனமிரங்கலாகாதா?

ம. யார் ?

கி. ஐயோ ! கிரிஜா ! கிரிஜா ! உமக்கொன்றும் பூர்வ ஞாபகமில்லையா ?—

ம. கி—ரி—ஜா !—வனஜா !

கி. வனஜாவல்ல ! கிரிஜா ! கிரிஜா !

ம. வனஜா—நல்லவள்—நல்லவளாகப் போய்விட்டாள்—கிரிஜாவுக்கு—பயித்தியம் பிடித்து—போச்சுது—

கி. ஆம் ஆம்—எனக்குப் பித்தம் பிடித்துத்தான் உம்மை வெறுத்தேன் !

ம. நீ—யார்—நல்லவளா, கெட்டவளா ?

கி. ஈசனே ! ஈசனே ! இதுவோ என்விதி !—பிராணநாதா, என்னை அறியாமற் போனற்போகிறது. இதோ நமது குழந்தையைப் பாரும்—ஜெயந்தன் ! ஜெயந்தன் !—

ம. யார் ?

கி. ஜெயந்தன் !—ஐயோ ! பிராணநாதா, உமக்கொன்றும் ஞாபகமில்லையா ? நான் கரு தரித்ததாக உமக்குக் கூறிய பொழுது ஆண்பிள்ளையாகப் பிறக்குமாயின் ஜெயந்தன் எனப் பெயரிடவேண்டுமென்று கூறினீரே, அதாவது ஞாபக மிருக்கிறதா ?

ம. இல்லை !—ஞாபகம் வராது—

கி. ஐயோ ! கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருமே !

ம. மாட்டேன் !—பயித்தியம்—பிடித்துப்போம் !—

கி. பிடிக்காது பிடிக்காது !

ம. மாட்டேன் ! மாட்டேன் ! மாட்டேன் !

கி. ஐயோ ! வேறு வழியில்லை—ஆனல் புராணம் சொல்லவா?

ம. வேண்டாம் வேண்டாம் ! நான் பாடுகிறேன், பாடுகிறேன் ! —“என் முகம் பார்த்தருளையா !”—புராணம் சொல்லாதே ?

கி. இல்லை இல்லை !—ஆனல் பாடவேண்டாம்—ஞாபகப்படுத்திப் பாரும்—நீர் யாரென்றுகூட ஞாபகமில்லையா? கொஞ்சம் நன்ருய் ஞாபகப்படுத்திப் பாருமே ! ஞாபகப்படுத்திப் பாருமே !

ம. பார்க்கட்டுமா ?—ஒரு ஊரிலே—ஒரு—ராஜா இருந்தாளும் !

கி. இருந்தாளும்—இருந்தாளும்—பிறகு ?

ம. பிறகு — பிறகு — மறந்து பூட்டாளும் !— ஓடிப்பூடாளும் !

கி. பிராணநாதா ! பிராணநாதா !—

வனஜா தனது சொந்த உடையில் வருகிறாள்.

வ. ஓடாதீர் ! உட்காரும்.

கி. ஆ ! யார் அது ?

ம. நீ நல்லவள் !—நீ கெட்டவள் !—இரண்டு பெயர் ! நான் ஓடிப்பூடட்டுமா ?

வ. கூடாது !—போய் படுத்துக்கொள்ளும்—

ம. நான் தூங்கட்டுமா ?

வ. ஆம்—தூங்கும்.

கி. வனஜா !—

வ. ஆம்—நான்தான்.

கி. அக்காள் ! நீ இறந்து போனதாகச் சொன்னார்களே !—நான் நம்பினேனே !—

வ. ஆம், நீ அவ்வாறு நம்பும்படியாகத் தான் அவ்வதந்தியைக் கற்பித்தேன் ; அப்படியாவது நம்பி, நீயும்—நமது—பிராணநாதரும், சுகமாயிருப்பீர்களென்று பார்த்தேன்.

கி. அக்காள் ! அக்காள் ! அந்த நற்புத்தி எனக்கில்லாமற் போயிற்றே ! இல்லாதபடியினாலன்றோ அவரை இக்கதிக்குக்கொண்டு வந்தேன் கொடும்பாவி நான் !—இனி என் செய்வேன் ? என் செய்வேன் ? அவருக்குப் பித்தம் பிடிக்கச்செய்து விட்டேனே ! பூர்வ ஞாபகம் கொஞ்சமும் இல்லைபோலிருக்கிறதே ! என் முகத்தைப் பார்த்தாலும் வெறுப்புண்டாகிறாற்போலிருக்கிறதே அவருக்கு !

வ. எல்லாம் சீக்கிரம் மாறிவிடும் பயப்படாதே—இது யார் ? உன் குழந்தையா ?

கி. [நாணத்துடன்] ஆம்—

வ. அப்பா, உன் பெயர் என்ன ?

ஜே. என் பெயர் ஜெயந்தன்'

வ. குரலும் அப்படியே இருக்கிறது—இவன் முகத்தைப் பார்த்தாரா பிராணநாதர் ?

கி. பார்த்தார்—ஆயினும் அவருக்கு எப்படி ஞாபகம் வரும் ?

வ. ஒன்றும் பயப்படாதே ! எப்படியும் சீக்கிரம் கண்டுபிடிப் பார். சிலதினங்களுக்கு முன் ஒரு மஹானைக் கண்டேன் ; அவர், இவருக்கு குழந்தை யொன்று பிறந்திருப்பதா யும், அவன் முகத்தைக் கண்டு எப்பொழுது தானுக அடையாளம் கண்டு பிடிக்கிருரோ, அக்ஷணம் இவரைப் பிடித்திருக்கும் சாபம் நீங்கி, பூர்வ ஞாபகம் எல்லாம் வந்து, முன்போல் சுவஸ்தமடைவா ரென்றும் கூறினுர்— அதைக்கேட்டு நான், மெல்ல அக்கூத்தாடிகளை இவ்வரண் மனைக்கு வரச்செய்து, இவரையும் அவர்களுடன் அழைத் துக்கொண்டு வந்தேன் —

கி. ஆனல், சற்று முன்பாக அவர்களுடன் ஜோகியுடையில் வந்தது நீயா ?

வ. ஆம்.

கி. அப்பொழுதே ஏதோ சந்தேகம் தட்டியது—அக்காள், நமது பிராணநாதர் பொருட்டு எவ்வளவு கஷ்டம் எல் லாம் நீ பட்டிருக்கவேண்டும் இத்தனை வருடங்களாக !— அக்காள், என்னை மன்னித்து உன் விர்த்தாந்தத்தை யெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்.

வ. நான் உன்னை மன்னிப்பதாவது ? நீ யல்லவோ என்னை மன்னிக்கவேண்டும்—உங்களுக்கிடையில் வந்ததற்காக.

கி. இல்லை அக்காள், நீதான் என்னை மன்னிக்கவேண்டும்— நான்தான் தவறிழைத்தேன்.

வ. சரி ! பழையபடி சண்டை ஆரம்பிக்காதே !—நாம் ஒரு வரை யொருவர் மன்னித்துக் கொள்வோம்—இனியா வது சமாதானமாய் வாழ்வோம்.—

கி. அப்படியே அக்கா!—இதுவரையிற் பட்டதுபோதாதா?

[கண்ணைத் துடைத்துக் கொள்ளுகிறாள்.]

வ. உம்—இனி துக்கப்படாதே! எல்லாம் அந்த மஹான் கூறியபடி சரியாகும்—வா இப்படி—அவர் அப்படியே நன்றாகத் தூங்கட்டும்—எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது. முன்பு போஜனம் கொண்டு, அப்புறம் என் கதையெல்லாம் சொல்லுகிறேன் வா.

ஜே. இது யாரம்மா இது?

கி. உன் பெரிய அம்மா.

ஜே. அவர்களுக்கு சாப்பாடு போடுங்கம்மா—பசிக்குதாம்.

வ. வாடா, எங்கள் கலிதீர்க்க வந்த கண்ணே!

[அவனுக்கு முத்தமிட்டு இடுப்பில் தூக்கிக்கொண்டு போகிறாள்; கிரிஜா பின் தொடர்கிறாள்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி.

இடம்—அரண்மனையில் பூஜாக்கிரஹம்.

மதனமோஹனன் ஒரு புறமாகப் படுக்கையில் படுத்திருக்கிறான்.

அருகில் ஜெயந்தன் விளையாடிக்கொண்டிருக்கிறான்.

மற்றொரு புறமாக ஒரு தீபத்தருகில் கிரிஜா வணங்கி நிற்கிறாள்.

கி. தேவி! உனது கையிலேயே ஒப்பிவித்திருக்கிறேன் என் பிராணநாதரை! நீயே கதி! நாங்கள் எவ்வளவு முயன்றும் உனதருளில்லாவிட்டால் எங்கள் பிரயத்தனமெல்லாம் வியர்த்தமாய் முடியும்! எப்படியாவது நீ எனக் கிரங்காவிட்டாலும் என் ஏழைப்பாலகனுக்காவது இரங்கவேண்டும்.—

வனஜா மெல்ல வருகிறாள்.

வ. கிரிஜா! மறுபடியும் நான் அவ்வளவு சொல்லியும் இங்கே வந்துவிட்டாயே!—பார்த்தாயா! அழுது கொண்டிருக்

கிறுயே ! இதற்குத்தான் இங்கு வரவேண்டா மென்றேன். ஒன்றும் பயப்படவேண்டாம், நமது பிராணநாதருக்கு ஒரு குறையு மில்லை இனி; நான் தைரியமா யிருக்கிறேனே; எழுந்திரு.

கி. அக்காள்! அக்காள்! உனக் கிருக்கும் தைரியம் எனக் கில்லை. உண்மையே! ஆயினும் பிராணநாதரை இக் கோலத்தில்—அதுவும் இந்த சமயத்தில்—எப்படிவிட்டு அரை க்ஷணமேனும் பிரிவேன்! என் மனம் பொறுக் குமா? ஐயோ! அந்த மஹான் கொடுத்த ஔஷதத்தி ஞல் மூர்ச்சையா யிருக்கிறுர். விழித்தவுடன் பழைய ஞாபகம் வருகிறதோ என்னவோ?

வ. ஒன்றும் பயப்படாதே! எல்லாம் வரும். நான்தான் அப்பொழுதே சொன்னேனே! ஒன்றும் சந்தேகப்படா தே! அவர் பிரக்ஞை யடைந்தவுடன், நம்மைக் காண லாகாது. குழந்தை ஜெயந்தன் மாத்திர மிருக்கட்டும். அவனை முதலில் கண்டறிந்தால், பிறகு நாம் வருவோம்,

கி. ஆமாம் அக்காள்—ஜெயந்தா, கண்ணே, இங்குதானிரு, சற்று பொறுத்து நாங்கள் வருகிறேும்.

ஜெ. என் குதிரையை அனுப்புகிறீர்களா?

கி. அனுப்புகிறேும்.

[கிரிஜாவும் வனஜாவும் போகிறுர்கள்.]

ஜெ. ஏன் என் குதிரை ஓடிவரவில்லை சீக்கிரம்? நான் இழுத் துக்கொண்டு வருகிறேன்.

ம. [மெல்ல கண் விழித்து] ஆ!—நான எங்கிருக்கிறேன்?— நான் கண்டதெல்லாம் கனவோ?—நெடுநேரம் உறங்கி னேனு என்ன?—இக்குழந்தை யார்?

கி. [உள்ளிருந்து] ஜெயந்தா! உன் குதிரை வருகிறது பார்!

ஜெ. எதோ? எதோ?—சீக்கிரம் அனுப்புங்கள்.

[விசையினுல் முடுக்கப்பட்ட மரக் குதிரை யொன்று அறைக்குள் வருகிறது.]

ம. கிரிஜாவின் குரலல்லவா அது?— ஓ!— ஜெயந்தா! ஜெயந்தா!—சந்தேகமில்லை!

[ஜெயந்தனைக் கட்டி முத்தமிடுகிறான்.]

வனஜாவும் கிரிஜாவும் ஓடி வருகிறார்கள்.

கி.-வ. பிராணநாதா பிராணநாதா!

ம. கிரிஜா! வனஜா!—நான் கனவு காணவில்லையே! கனவு காணவில்லையே?

கி.-வ. இல்லை! இல்லை!

ம. உண்மைதானே? உண்மைதானே?

வ. உண்மைதான், ஒன்றும் அஞ்சாதீர்.

கி. பிராணநாதா! வாரும் அரண்மனைக்குப் போவோம். இதுவரையில் நடந்ததைப்பற்றி ஒன்றும் யோசியாதீர்; எல்லாம் சுபமாய் முடிந்தது. நானும் என் அக்காளும் சண்டையெல்லாம் போய் சமாதானமாய்விட்டோம், வாரும்.

ம. கிரிஜா, இது?—

கி. என்மைந்தன்—ஜெயந்தன்.

வ. என்மைந்தன் இல்லையோ?

கி. அக்காள்—நான் சொன்னது தவறுதான்—பிராணநாதா, நமது மூவருடைய மைந்தன், ஜெயந்தன்!

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.